[illegible]

[illegible] 6 [illegible] 9

[illegible] 1933

JL
3211,N27 SM
M33.6.9
186926

1060


உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.





OF THE REGISTRAR OF BOOKS

16 FEB 1934

MADRAS


# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.


ஆண்டு சு. § ஸ்ரீமுக-சித்திரை 1933-ஏப்ரல் § திங்கள் கூ.


உள்ளுறை


| | உள்ளுறை | பக்கம். |
|---|---|---|
| க. | திரைகடலோடியும் திரவியந்தேடு. | 321 |
| உ. | பலவான்குடி ஸ்ரீ குமாரவிநாயகர் துதி. | 324 |
| ௩. | சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும். | ,, |
| ௪. | சைவசமயத்தின் சிறப்பியல்பு. | 325 |
| ௫. | பரமாத்மா யார்? | 329 |
| ௬. | வரன்முறை. | 338 |
| எ. | கலியின் வலிமை கண்டஞ்சார். | 339 |
| அ. | இதிலென்ன தப்பு? | 340 |
| ௯. | மணிமேகலை. | 341 |
| ௰. | திருக்குறள்—கடவுள்வாழ்த்து. | 346 |
| கக. | ஜீவபாலனும் செட்டியாரும். | 350 |
| கஉ. | பனையின் பிரயோஜனம். | 353 |
| க௩. | இலவம்பஞ்சிற்றுயில். | ,, |
| க௪. | மேனாட்டு ஸ்திரீகளின் குடும்பவாழ்க்கை விபரீதம். | 354 |
| க௫. | மயிலுக்குத் தோகைவந்த வரலாறு. | 356 |
| க௬. | சிவாநந்தர் திருவாக்கு. | 357 |
| கஎ; | மதிப்புரை. | 358 |
| கஅ. | சங்கரலிங்கஉலா: | |



ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,

பலவான்குடி.



சென்னைப் பதிவு எண் 2302.

# செய்தித் திரட்டு.

**உள்ளூர்:**—சென்ற மாதக் கடைசியில் நல்லமழை பெய்து குளிர்வித்தது.

செங்கமல நாயகி திருவுலா, திருவாளர்களான மெ. வெ. வெ. வேலப்பசெட்டியாரால் சென்றமீ அவ யிலும், கரு. சித. சிதம்பரஞ் செட்டியாரால் கடுவயிலும் சிறப்பாகச் செய்யப்பெற்றது.

இம்மதி கவ சிவாலயத்தில் விநாயகர் சந்திரசேகராதி மூர்த்திகள் எழுந்தருளினர்.

குமாரவிநாயகர் திருக்கோயிலில் இம்மதிகூவ திருவோணநாள் நடராஜாபிடேகமும், திருவாசகபாடகசாலையில் அவ சதயநாள் திருநாவுக்கரசநாயனர் குருபூஜையும் இனிது நடைபெறும்.

**ஆத்தங்குடி:**—சநாதனதர்மமகாசபை, சென்ற பங்குனி ௰உவ மறைதிருவாளர் குறிச்சி தர்க்க வித்துவான் இராமபத்திராசாரியார் தலைமைவசிக்க நடைபெற்றது. சநாதனதர்மிகளாகிய திருவாளர்கள்.—அரியக்குடி இராமாயண வித்துவான் சக்கரவர்த்திஐயங்கார்—ரா. கிருஷ்ணசாஸ்திரியார்—சொக்கலிங்கம்புதூர் போர்டுஸ்கூல் தலைமையாசிரியர் குருமூர்த்தி ஐயர்—வேதசாஸ்திரவித்வான் கல்யாணசுந்தர கனபாடிகள்—மூ. திருவேங்கடமையங்கார்—சபையின் உபதலைவர் சு. வீர. கதிரேசச்செட்டியார் ஆகியவர்கள் உரையாடினர். உ. சிறுவயல் மெ. சு. நாராயணன் செட்டியார் சண்முகப் பெருமான்பேரிலும், பொன்னழகியம்மன்பேரிலும் இயற்றியபாக்களைப் பாடினர். ம. நாராயணையங்காரைப் பொக்கிஷதாராகத் தீர்மானிக்கலாயிற்று.

**திருத்தேன்குடித்திட்டை:**--சிவாலயத்தில் பங்குனிஉத்தரமண்டபப்படி திரு. முத்தைய பிள்ளையவர்களால் சிறப்பாக நடைபெற்றது. சுவாமி திருவுலாப்போந்து திருக்குளத்தில் தீர்த்தம் கொடுத்தருளினர்.

**சுங்குரும்பை:**—ஸ்ரீ தண்டாயுதபாணி உத்தரமகோற்சவம் கொண்டு ஆங்கீரச பங்குனி உஎ, உஅவகளில் திருமஞ்சன திருவாராதன மகேசுவர பூசாவைபவங்களுடன், திருத்தேரிலும்மயில்வாகனத்திலும்திருப்பவனிவந்தருளினர். உஎவ மங்களநாயகி கோயிலில்தழலாட்டுவிழா நடைபெற்றது.

**'பணமும் லேவாதேவியும்'':**—இத்தலைப்புடன் 18-3-33 உள்ள திரு. வை. சு. அவர்களின்வெளியீடு சிங்கப்பூரிலிருந்து வரப்பெற்றோம். அது கடன் தொல்லைகளை விஸ்தரிக்கின்றது. "கடன்படுஞ் செல்வர்களினும் கடன்படாவறியர்களே சிறந்தவர்கள்'' என்பது உயர் திரு. ஆறுமுகநாவலவர்கள் எழுதிவைத்த நீதிவாக்கியம். "கடன்படாமற் கால் வயிறு கஞ்சி குடித்தாலும் கஷ்டமில்லை.'' என்னும் பொருளாகக் "கடனில்லாக் கஞ்சி கால்வயிறு'' என்பது உலகவழக்கு.

**புதுவயல்:**—சரஸ்வதி சங்கத்தின் 11—வது ஆண்டு நிறைவுவிழா இம்மதி கூவ மதுரைத் தமிழ்ச் சங்கக் காரியதரிசி திருவாளர் எஸ். சோமசுந்தரபாரதியார் அட்வகேட் அவர்கள் தலைமையில், பெரியார்களும்மாணவர்களும்விரிவுரையாற்ற, சங்கீதக்கச்சேரிநடாத்திஇனிது நிறைவேறியது.

---

13 FEB 1934
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கூ } பலவான்குடி—ஸ்ரீமுக-சித்திரை { திங்கள் க.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## திரைகடலோடியும் திரவியந்தேடு.

இஃது, ஔவைப் பிராட்டியாரின் தெய்வீகத் திருவாக்கு. இதன்பொருள் அலைகின்ற கடலிலே வங்கமேறித் தூரதேசங்களுக்குச் சென்றும் பொருளை யீட்டிக்கொள் என்பதாம். இவ்வாக்கியம் யாவர்க்கும் பொதுவேயாயினும், இதனைச்சிறப்பாகக் கடைப்பிடித்தொழுகுபவர், தமிழ்நாட்டில் தனவணிக மக்களே யாவர். மனித வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாமையைக் குறித்தே 'அஃகமும் காசும் சிக்கனத் தேடு' எனவும், 'பொருள்தனைப் போற்றிவாழ்' எனவும் அருளிப்போந்தனர். பொருள் என்பது கைப்பொருள் மெய்ப்பொருள் என்னும் இரண்டையும் குறிப்பதாயினும், மெய்ப்பொருள் கல்வி எனவும், கைப்பொருளை பொன் பூமி ஆதியபொருளெனவும் உலகில் வழங்கலால், ஈண்டு திரைகடலோடித் தேடப்பணித்த திரவியம் பொன் பூமியாதிய செல்வப்பொருளேயாம். பொருளீட்டுதல் புருஷார்த்தங்களின் பொருட்டே. புருஷார்த்தங்களாவன, அறம் பொருள் இன்பம் வீடு என நான்காம். இந்நான்கையும் ஒவ்வொருவரும் அடையமுயன்று பயன்றுய்த்தல் ஆவசியகமே. இந்நான்கனுள், பொருளும் ஒன்று. இப்பொருளை அறநெறியினின்று ஈட்டவேண்டுமென்பது குறித்தே, அறத்தை முதன்மையாக அமைத்து, அதனாற் பொருளீட்டவும், ஈட்டியபொருளை உரியதுறைகளில் செலவிட்டு இன்பம் துய்க்கவும், இம்மூன்றையுங் கடந்து பேரின்ப வீடுபெறவும் வேண்டும் எனப் பண்டைப்

பெரியார்கள் கொண்ட நோக்கமாகும். தருமம் என்பது சத்தியத்தையே பிரதானமாகக் கொண்டது. 'சத்தியந் தவறு திருப்பவரிடத்தினில் சார்ந்து திருமாதிருக்கும்' எனவும்,

'நீரும் நிழலும் நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—சீரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான்."

எனவும் வரும் ஆன்றோர் வாக்கியங்கள் பல சான்றாகும். ஆகவே, பொருட்செல்வம் சத்திய புத்தியுடன் நாணயமாகக் கருமம்புரிபவர்கட்கே கைகூடுவதாகும். இதனை, உலகவாழ்வை விரும்பும் ஒவ்வொருவரும் ஊக்கத்துடன் தேடுதல் வேண்டும். 'ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு' எனவும்

'ஆக்கமிங் கொருவரா லாகுக வேண்டுமே
ஊக்கமுண் டாவரே லுறுவ ரன்னது
நீக்கமில் கொள்கையி னிற்ப ரேயெனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்."

எனவும் பணிக்கும் பெரியார்களின் திருவாக்குகளும் வலியுறுத்தாநிற்கும்.

இத்தகு பொருளை யீட்டுதல் எற்றுக்காமெனில், இம்மை மறுமைக்கு ஏதுவாய அறம்பல புரிதற்கே ஆமென்ப. இதுபற்றியன்றே, மணிவாசக வள்ளலும், 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' என்னும் திருவாசகம் அருளினர். பொருளிலார்க்கு இவ்வுலக மில்லை யென்னும் திருவள்ளுவ தேவர் திருவாக்கைக் கொண்டும், இவ்வுலக வாழ்வுக்கு பொருள் இன்றியமையாமை என்பது புலனாகும்.

இப்பொருளைக் கடல் கடந்துதான் ஈட்டவேண்டுமோ எனில், தன்னாட்டில் ஈட்டச் சாத்தியமின்றேல், அயல்நாடு சென்றும் ஈட்டுக என்ற கட்டளையேயாம். அயல்நாடு செல்லுங்கால், மனைவியைக் கொண்டுசெல்லாது, இல்லில் வைத்துப் பிரிவானேன் எனின், இல்லாள் என்னும் அவள் இல்லத்தைக் கண்காணித்துக்கொள்ளுதலும், கணவன் பொருளிலே நாட்டமாகத் தூரதேசஞ் சென்று ஈட்டி வருதலுமே முறை எனக்கருதி, பொருள்வயிற் பிரிதலைப் பெரியார்கள் வரையறைசெய்தனர். பொருளீட்டுந் துறையில் சம்சாரபந்தமான தொல்லைகளில்லாதிருந்தால் சலியாது ஈட்டு முயற்சிக் கிடையூறின்றி ஈட்டுதல் ஒன்றே நாட்டமாக முயலவும், அம்முயற்சி தவநிலையாக நிறைவேறிக் காரியம் கைகூடவும் [illegible] சேக



ரித்து வரவும் கூடும் என்பது அநுபவசித்தாந்தமு மாகும். இங்ஙனம்பிரிந்து சென்று பொருளீட்டப் பிரியமில்லாதவர்கள் பிரிந்து நடாத்தும் ஊக்கமுடையவர்களைக் கொண்டேனும் இருந்தஇடத்திலிருந்தேனும் இயன்ற அளவு ஈட்டி வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை நடத்தியும் வரலாம். உடனழைத்துச் செல்லல் இக்காலத்துக்கு ஏற்றதே யென்பாரும் உளர். அது கட்டுப்பாடு கடத்தலாகவும், அதனால் பலமுட்டுப்பாடுகள் உண்டாமென்பதும் ஆழ்ந்து சிந்திப்பார்க்குத் தெளிவாகும். தொழில் நிமித்தம் மூன்று வருடம் தூரதேசங்களில் வதியும்வழக்கத்தைக் கையாண்ட காரணம், முதல் வருடத்தில் ஊர்நிலை தெரியவும், அடுத்தவருடம் தொழின்முறை ஊக்கமாய்ப் புரியவும், மூன்றாவது வருடம் ஒடுக்கிப்பணமாக்கி வரவுமேயாம். இக் காலத்துப் பழகின அடுத்தாட்கள் முன்னும் பின்னும் இருந்துவருதலாலும், தன்னாட்டினும் பல்வேறு அலுவல்கள் விரிந்திருத்தலினாலும், மூன்று வருடம் அதிகமென்று கருத வேண்டியதாகவே இருக்கிறது. தொழின்முறைகளைப் பழுதில்லாமல் அடக்கமாக நடத்திவரும் பக்ஷத்தில் எந்தக்காலத்திலும் சொந்த ஊருக்கு வந்துபோய்வரச் சௌகரியமே யாகும். பேராசை காரணமாகப் பெருங்கடன்பட்டும், குடி கூத்தி வஞ்சக் கொடுஞ்சூதினால் மிடியுற்றுப் கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாகாமல், ஆடம்பரமின்றி அடக்கமான வாழ்க்கையை மேற்கொண்டால், தன்னாட்டில் பொருளீட்டியும், அயல்நாடு சென்றும் பொருளீட்டியும், யாதாமொரு அல்லலுமின்றி வாழுதற்கு ஏதுவேயாம். கைவந்த பொருளைப் பேணாமல், ஆரவாரத்தால் அழிப்பதுவே 'பேணாதான் கையிற் பொருளருமை' என்பதைக் காட்டுவதாகிறது. வருவாய் சுருங்கிய காலத்திலும் கேடின்றி வாழவேண்டுமேல் சிக்கனமே தக்கமுறை.

'ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.'

என்னும் அருமைத் திருவாக்கைப் பெருமையாகப் பேணினால், ஆனமுதலில் அதிகஞ் செலவாகாது, மானமழியாது, மதிகெடாது, சென்றவிடங்களி லெல்லாம் பொன்றாப்புகழும் உண்டாகும்.

ஆதலால், திரைகடலோடியும், அறநெறியாற் பொருளீட்டியும், ஈட்டியபொருளைத் தீநெறிக்கட் செலவிடாது தெய்வநம்பிக்கையுடன், 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங், கைம்புலத்தா றோம்பல் தலை.' என்னும் பாகுபாடுகளின்படி கணக்கறிந்து செலவு செய்து, காலமெல்லாம் சாலச்சிறந்த வாழ்க்கையுடன் ஞாலத்திற் பெரும்புகழ் பெறுவோமாக.

186926

உ

## பலவான்குடி, ஸ்ரீ குமாரவிநாயகர் துதி.

[பரிமணங்குடி வித்துவான் திரு. மு. முத்துப்பிள்ளையவர்களியற்றியன.]

1. சீமுக வாண்டதனிற் செல்வமிகுத் தோங்கவைங்கை
மாமுகனைப் போற்றிமகிழ் வாம்.

2. ஐந்தெழுத் தோதிவெண் ணீறணிந் தம்ப ரனவரதம்
வந்தனை செய்யப் பலவான் குடியென மன்னுபெயர்
சந்த முறும்பதி வாழுங் குமரதந் தாவளத்தின்
சுந்தரப் பொற்றிருப் பாதார விந்தத் துணைதுணையே

---

## சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும்.

(பரிமணங்குடி வித்துவான் திரு. மு. முத்துப்பிள்ளையவர்களியற்றியது.)

கடல்வரைப்பிற் செந்தமிழுஞ் சைவமுமெங் கணுந்தழைத்துக்
கதிர்பெற் றோங்கத்
திடமுணர்த்திச் சிவநேசத் திங்கட்டாட் பிரசுரஞ்செய்
சீமான் றாய
நடையிணைக்கொள் திருப்பலவான் குடிராம சாமியென
நாமம் பூண்ட
கொடைமிகுத்தோன் வாழியெனக் குன்றைநகர்க்குகன்பதங்கை
கூப்பு வாமே.

*　　*　　*　　*

(சென்னை திருமயிலை செங்குந்த வாலிப சங்கத்தார்)

சைவக் கருத்துகள் கைவந்து உதவும் ஒப்புயர் வில்லாச் சீரிய செந்தமிழ் இதழாகிய சிவநேசன்என்னும் திங்கட்டாளுக்கும்அதன் ஆசிரியரவர்கட்கும் இச்சங்கம் பெரிதும் நன்றிகூறுகின்றது.

*　　*　　*　　*

(புனேப்பென்,கம்போஸ்,திரு. ஆறு. சு. முரு. பொன்னழகப்பன் அவர்கள்.)

ஐந்தாண்டுகளாகத் தங்களால் சிவசமயத்தின் சிறப்புகளையும் சிவனடியார்களின் மகிமைகளையும் தெற்றென விளக்கி மாறுபட்ட போலி இயக்கத்தினரின் வாய்த்திமிரையடக்கி வந்துலாவிய "சிவநேசன்" ஆறும் ஆண்டாகிய ஆங்கீரச ஆவணி முதல் திங்கள் வெளியீடாக வருதலைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நமது செந்தமிழ்த்தெய்வ 'சிவநேசன்' பேரறிஞர்களின் சிறந்த கட்டுரைகளை முன்னையினும் பன்மடங்கு தன்னுட்டாங்கி சைவஉலகிற்குத் தனிப்பெருமை யளித்து பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஈசன் எம்பெருமானை இறைஞ்சுகின்றேன்.

---

உ

# சைவசமயத்தின் சிறப்பியல்பு.

[திருமதி: ஈ. த. இராஜேசுவரியம்மாள் எம். ஏ. எல். டி.]

### 1. சமயமும் நீதியும்.

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான கொள்கைகள் பலவுள. அவை மக்கட்பிறவிக்கு இன்றியமையாத நன்னெறிச் சட்டங்களாம். அச்சட்டங்களைச்செவ்வனே ஓம்புதல், இந்நில உலகின் இனியவாழ்க்கையில் யாதொரு கலகமுமின்றி வாழப்பயன்படும். கிறிஸ்தவவேதத்தில் போதிக்கும் பத்துக் கற்பனைகள், அச்சமயத்திற்கே சொந்தமானவை என்று சொல்லுவதற்கிடமில்லை. அவை எல்லா மதங்களிலும் வேறு உடையுடன் காணப்படுகின்றன. நமது ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய சிறுபிள்ளைகள் கற்கும் நூல்களிலும் வைதிக ஒழுங்கில் வாழ்நாட்களைக் கழிக்க எல்லா நன்மக்களுக்கும் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவன்றோ? எச்சமயமும் பொய் பேசவாகிலும் வேறு எவ்வித துர்க்காரியம் செய்யவாகிலும் போதிக்கவில்லை. ஆயினும், சிலசமயங்கள் ஆத்திசூடி கொன்றைவேந்தன் சட்டதிட்டமே மக்கள் வாழ்நாள்முற்றும் வைதீக நடைக்குப் போதுமானதென்று கொண்டு அவற்றுடன் நிற்கும். மற்றச் சமயங்களோ அவற்றுடன் திருப்தியாகாமல் இன்னும் மேலே செல்லவேண்டிய கருமங்கள்உளவெனக்கண்டு, சமணர் பௌத்தர் போதித்த நாலடியார் முதலிய நூல்களின் வைதிகநிர்ணயம், வைதிக வாழ்க்கையின் ஆரம்பம் என்றே கொள்ளும்.

'வேர்வந்துற மாசூர்தர வெயினின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர மறையாவரு வாரும்
ஆரம்பர்த முரைகொள்ளன்மி னண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையானல்ல கழல்சேர்வது குணமே.'

(சம்பந்தர்—திருவண்ணாமலை, 10)

தெருப்பள்ளிக்கூடத்து நான்காம் வகுப்பு மாணவன் தன்வகுப்புக் கல்விக்குப் பெரியது இல்லை என்று எண்ணவேண்டாம்; இக்கல்வியை அடிப்படையாகக் கொண்டு மேலெழும் கல்வி வகுப்புகள் பல உள என்று ஆய்ந்து அறிவானாக என்பதே நமது சமய குரவர் போதனையாம். அவ்வாறு அறியாமை விருத்திக்கு இடமில்லை என்றும், அறியவேண்டியது அறியாது ஒழிதல் மூர்க்கம் என்றும் சம்பந்தர் கூறுவார்,

'பறிகொள் தலையினார்—அறிவ தறிகிலார்
நெறிகொள் மிழலையீர்—பிறிவ தரியதே'

என்றார்.

### 2. சைவமும், மேல்நாட்டுச் சமயங்களும்.

குற்றமற்ற உலக வாழ்க்கையில் நடப்பதே சைவம் முதலிய வைதிக வாழ்க்கைக்கு அடிப்படை என்று கண்டோம். ஆயினும், அவ்வடிப்படை

யின்மீது கட்டப்பட்ட ஏனைய சமயங்களுக்கும், அதாவது முக்கியமாய் மேல்நாட்டுச் சமயங்களுக்கும், நமது சைவசமயத்திற்கும் தத்துவத்தில் உள்ள பேதங்களில் முக்கியமானது ஒன்று கூறுகின்றேன். மேல்நாட்டுப் பார்வையில் மனிதனது நன்னெறியென்பது ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையேயுள்ள சம்பந்தாசம்பந்தங்களைப் பற்றியதேயாம். வேறு ஜீவராசிகள், அந்நோக்கில் வர இடமே இல்லை. மேல்நாட்டுச்சமயங்களில், மனிதர்களைப்போல் எல்லா உயிருள்ள பிராணிகளுக்கும் ஆத்மா ஒன்று உண்டென்பது சித்தாந்தம் அல்ல. மனிதனுக்காக உலகில் எல்லாப் பிராணிகளையும் கடவுள் சிருஷ்டித்தார் என்பதும், அவன் இஷ்டப்படி அவற்றை உபயோகிக்கலாம் என்பதும் மேல்நாட்டுச் சமயங்களின்கொள்கையாம். நமதுசமயமோ எல்லா உயிருள்ள ஜந்துக்களும் மனிதனைப்போலவே உலகத்தில் வசிக்க உரிமையுடையன என்றும், ஒவ்வொரு உயிருக்கும் உயிராய்ச் சிவபெருமான் திகழ்கின்றார் என்றும் போதிக்கின்றது.

'உரைசேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரு முகில்முழவ மயில்கள்பல நடமாட வண்டு பாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள் கையேற்கு மிழலை யாமே.'

மனிதனுக்கு உணவளிக்கும் பூமிதேவி தனது மலர்க்கையான காந்தள் (சூரியகாந்தி) முதலிய புஷ்பங்களின் தேறல் வண்டுகளை ஆதரிக்கின்றது கண்டு ஆனந்தித்தவர்கள் நமது சமய குரவர்களே. நமது சமயத்திலோ ஒரு சிறு பிராணி அல்லது ஒரு புல்பூண்டு அழிப்பதற்கும் நமக்குச் சுதந்திரம் தரவில்லை. சைவசமயம் ஊன் உண்ணுமையை மாத்திரம் போதித்து, தாவரசங்கம ஜீவர்களை இம்சிக்க விட்டுவிடவில்லை. சைவம் என்பது சாதாரண சொற்பிரயோகத்தில் ஊனுண்ணுமை என்று பொருள்படினும், ஊனுண்ணுமைக்கும் பெரியதோர் கொள்கையாய் மரம் செடி முதலியவற்றிற்கும் அன்பு பூண்டு ஒழுகும் ஒருசமயமாய் நிற்கின்றது. இக்காரணத்தினலேயே நமது தேவாரத் திருமுறைகள் இயற்கைத் தோற்றத்தை வியந்து பாடி அவற்றின்மூலமாய் ஈசுவர தத்துவத்தை விளக்கி நின்றமை காண்கின்றோம். சைவத்திற்கும் ஏனைய உலகச்சமயங்களுக்கும் உலகவாழ்க்கையின் நன்னெறி என்னும் அடிப்படை ஒன்றேயாயினும், அவ்வடிப்படையின்மேல் நிற்கும் கட்டிடச் சாமான்களும் கட்டிய முறையும் பலவாறு பேதப்படும். அவற்றை யாதென்று ஆராய்வோம். சைவ சமயத்திற்கும் ஏனைய சமயங்களுக்கும் உள்ள முக்கிய பேதங்களை இருவகையாய்ப் பகுக்கலாம்.

3. சைவ இலக்கணமும் ஏனைய சமய இலக்கணமும்.

1. சொரூபலக்ஷண பேதம் ஒன்று (Statical aspect.)
2. தடஸ்தலக்ஷண பேதம் மற்றொன்று (Dynamic aspect.)

[உபலக்ஷணங்களை (Minor aspects) முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதில்லை.]

1. சைவத்தை ஏனைய சமயங்களினின்று வேறுபடுத்தும் சொரூபலக்ஷண அம்சங்கள் நான்காம். அவையாவன:—



(1) உற்பத்தி (Origin). (2). வேதம் (Scriptures)
(3) வழிபடுவோன் (Adherents). (4) குரு (Prophet).
அவற்றை முறையே நோக்குவோமாக.

(1) உற்பத்தி:— எல்லாமதங்களும் அவ்வச் சமயகுரவர்களாலே ஆக்கப்பட்டனவாம். சைவசமயமோ, நமது சமயகுரவர்களால் உண்டாக்கப்பட்டதன்று. அவர்கள் மனதுக்கும் எட்டாத வெகுபுராதன உற்பத்தியை உடையதென்று தேவாரங்கூறும்.

"புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும்
கலையெட்டுங் காப்பெட்டுங் காட்சி யெட்டும்
கழற்சே வடியடைந்தார் களைக ணெட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மை யெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்க ளெட்டும்.
திகையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோ? பின்னோ?
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே." —அப்பர்.

சிவத்துடன் பிறந்தது சைவம். எனவே, அதன் உற்பத்தி மனோவாக்கிற்கு அதீதமான ஆதியை யுடையது.

(2.) நமது வேதம்:—நமதுமறைகள் கடவுளை அறிவதற்கு வேண்டிய ஒவ்வொன்றையும் கொடுப்பதாக வீண் இடம்பம் பேசுவதல்ல. நமது சமயகுரவர்கள் ஈசுவரதத்துவத்தில் ஆழ்ந்து அநுபவித்த அவர்கள் சுவானுபூதி (spiritual experience) விளக்கமே நமது தமிழ் மறைகளாக விருக்கிறது.

" குற்றநீ ! குணங்கள்நீ ! கூடலால வாயிலாய்!
சுற்றநீ ! பிரானுநீ ! தொடர்ந்திலங்கு சோதிநீ!
கற்றநூற் கருத் துநீ ! யருத்தமின்ப மென்றிவை !
முற்றுநீ ! புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே !
(சம்பந்தர்.)

தம்மைத் தொடர்ந்திலங்கும் சோதியைப்பற்றிப் பாடியதே, சைவத் திருமுறைகளாகும். இம்மறைகள் 'பொருள்' உணர்ந்து நடக்கவேண்டிய வழிகளைக்காட்டும் நூல்களாய் இருக்கின்றனவாயினும், தேவாரத் திருவாசகப்பதிகங்களில் ஒருசெய்யுளும் அறியாதவனும் பரிசுத்த சைவனாய் இருப்பது முடியாத காரியமன்று. மேல்நாட்டுச் சமயவேதங்களைப்போல் தம்மைப் பாராயணம் செய்யாதவன் இச்சமயத்தில் சேராதவனென்று நமது மறைகள் கூறவில்லை.

மற்றும், நமது சமய மறைகள் கோயிலுக்காகவுமே அல்லது பூஜைவிதிக்காகவு மென்றுமே எழுதப்பட்டன வல்ல. நமது வாழ்நாட்களிலுள்ள ஒவ்வோர் இயக்கத்தின் பாகத்திலும் அவற்றை நாம் பயன்படுத்துமாறு அவைபாடப்பெற்றன. பின்னும் அவை கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் பயன்படும். ஏனெனில், அவை பொருள் மயக்கும் நடையுடை பெற்றனவல்ல. ஒருவனுக்குத் தமிழ்க் கல்வி சாதாரணமாயிருப்பினும், நமது மறைகளி

ணின்று வாக்கியங்களின் பொருள் நன்கு அறியலாம். அவ்வாக்கிய விஷயங்களோ வைதிகவிஷயங்களே எனக் கூறுவதற்கு மிடமில்லை. வைதிக ஒளியுடன் பல அறிவியற் கல்விகளும் பற்பல கலைஞானங்களும் நமது சமயகுரவர்கள் பெற்றிருந்ததை, ஒருவாறு காட்டித் தத்துவ ஞானத்தை நடைவடிக்கையில் பயன்படுத்தும் முறைகளைக் காட்டுகின்றன. நமது குரவர்கள் பேரறிவாளராதலால் கண்மூடி நம்பிக்கையைக் காட்டிலும், சமயத்தில் அவநம்பிக்கையுடையவர்கள் தமது மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடப்பாராயின், அவரே மேலோரெனக் கொள்வர். கஞ்சிஉண்பதற்கு முன்னம் சிவலிங்கத்தின்மேல் கல்லெறிந்த சாக்கியனாரை, அறுபத்துமூன்று அடியார்களில் ஒருவராக நமதுசமயம் கொண்டவாறு, எச்சமயத்தில் அதன்விரோதியான புறச்சமயத்தானை ஓர் அடியானெனக் கொள்ளும் வழக்கம் உண்டு?

"விரிவிலா வறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்"

என்று எச்சமயம் கூறும்? நமது மறைகள் ஒருதலைப் பட்சமாய் மதக்கொள்கை காட்டாது எம்மதத்திற்கும் சம்மதமாமாறு தனது சித்தாந்தத்தை நிலைநிறுத்தும்.

3. சமய ஒழுக்கத்தினர்(adherents):—நமது சமய அடியார்கள் பிறக்கும்போதே சைவராய்ப்பிறக்கவேண்டு மென்கிற நிபந்தனையில்லை. ஆயினும், அத்தகைய கொள்கை பெற்ற மற்றமதங்கள் தமது மதத்திற்குக்கட்சி மாற்றி (Conversion) வரவேண்டுமென்று வற்புறுத்துவதுபோல் நமது சமயத்தை ஏற்கும் புறச்சமயத்தானுக்குக் கட்சிமாற்றவேண்டும் என்னும் நிபந்தனைக்கு முட்படுத்துவதில்லை. ஒரு வைணவன், தனது வைணவச் சின்னங்களை மாற்றாது நமது கோயிலுக்கு வரவும், சிவபெருமானைத் துதிக்கவும், தேவார பாராயணம் செய்யவும் கூடும். இதற்கு அறிகுறியாக நமது சைவசித்தாந்த மகா சமாஜத்திலும் வைணவ சமயத்தினரை அங்கத்தினராக ஏற்றுள்ளோம். மற்றப் புறச்சமயங்கள் சைவ வைணவ சின்னங்களுடையவர்களைத் தமதுசமயக்கூட்டத்தில் சேர்த்ததில்லை. இதற்குக்காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்கின், சைவசமயம் வெளி வேடத்தைக் கருதாது உள்ளன்பும் நல்லொழுக்கமுமே கவனிக்கு மென்பதும், நமது சமயத்தினர் உலகிலுள்ள எச்சாதி எச்சமயம் உள்ளவரேனும் சைவசமயக் கொள்கைகளைஉடையவராய் அச்சீலத்தைத் ஓம்புவோராயின் சிவனடியார் என எண்ணப்படுவர் என்பதும் வெளியாகும்.

4. நமது சமயகுரவர் (Prophets):—ஏனையசமயகுரவர்கள் தாங்கள் கடவுளால் அனுப்பப்பட்டவர்களென்றும், அவர் காரியத்தை நிறைவேற்றுமாறு தாங்கள் உதித்தார்களென்றும் தமது சீடர்களுக்கும் உலகத்தாருக்கும் வெளிப்படையாகக் கூறினார்கள்.

(தொடரும்)

---

உ

# பரமாத்மா யார்?

(பொன்னேரி ப்ரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் எழுதுகிறார்.)

பிரமன் விஷ்ணு உருத்திரன் இந்திரன் சந்திரன் முதலிய எண்ணற்ற தெய்வப்பெயர்களுட் சிலவோ பலவோ காணப்படாத மதநூல் ஒன்றுதானும் பரதகண்டத் தகப்படுவது அருமை. ஆயினும், அவ் வெல்லாப் பெயர்களுக்கும் முதலிடம் இருக்கு முதலிய நான்கு வேதம். அதிலிருந்துதான் அவை எல்லா மொழிநூல்களிலும் பரவலாயின. வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டவருட் பலமதஸ்தர் தோன்றற்கு அப்பெயர்ப் பன்மையே காரணம். ஆயினும், அச் சகல சமயிகளும் இரண்டு வகையிலடங்குவர். "வேதத்தில் கண்ட ஒவ்வொரு தெய்வப்பெயரும் ஒவ்வொரு தெய்வத்தைக் குறிக்கும். எல்லாக் கடவுளருந் தனித்தனி உள்பொருள்கள். ஆனால், அவரனைவருமே முழு முதல்வராகார். ஒருவரே அத்தகையார். மற்றையரெல்லாம் அவர்க் கடியர். அம் மற்றையரையுங் கடவுளரெனல் உபசாரம்" என்பர் ஒருவகையார். இவர் தத்தம் மதத்துக் கேற்ப அம் முழுமுதற்கடவுள் பிரமனே யென்றும், விஷ்ணுவேயென்றும், உருத்திரனே யென்றும் பலவாறு கூறுவர். இன்னொரு வகையார், "அப்பெயர்களனைத்தும் சொல்லளவில் மட்டும் பேதப்படும். அவற்றின் பொருளொன்றே. அதுவே பரப்பிரமம். பெயர் வெவ்வேறாகலின் பொருளும் வெவ்வேறுதா னெனல் மடமை என்பர். இவ் விருவகையாரது கொள்கைகளுள் ஒன்றே உண்மையாதல் வேண்டும். இரண்டும் உண்மையாக முடியாது. அஃதொருபுற மிருக்கட்டும். அப் பரப்பிரமத்தைத் தேர வழிகளும் இரண்டே. ஒன்று வேதவாராய்ச்சி; மற்றது அநுபவ ஞானம். அநுபவ ஞானமாவது கடவுளை நேரே காண்டல். ஆயினும், விஷயத்தை விளங்கவைக்கும் ஆற்றல் வேத வாராய்ச்சிக்குப் போன்று அநுபவ ஞானத்துக்கு அத்துணை யில்லை. ஆகையாற்றான் அனைத்தனுபவிகளும் தம் மநுபவத்தை வேதத்தோடு ஒட்டவைத்துப் பிறர்க்கு விளங்கவைக்கின்றனர். விளக்கப்படுவோரும் வேதத்தைக்கொண்டே அவ் வநுபவத்தை ஏற்பர். வேதத்துக் கியையாத அநுபவம் தள்ளவே படும்.

இன்னும், ஒவ்வொரு மதத்திலும் அநுபவ ஞானிகள் அநேகர். ஒவ்வொருவரது அநுபவமும் வெவ்வேறு. ஒரு ஆழ்வார் "நாராயணர் எனக்குத் தரிசனம் தந்தார். அப்போது அவர்முன் சிவன் கைகூப்பியவண்ணம் நின்றதும் எனக்குத் தெரிந்தது. ஆகையால், நாராயணரே முழுமுதற் கடவுள்" என்கின்றார். ஒரு நாயனார், "ஸ்ரீ சிவபிரானார் எனக்குக் காட்சி யளித்தனர். அப்போது விஷ்ணு முதலிய சகல தேவர்களும் அவர் திருமுன் சிரமேற் கரங்குவித்து நின்றதையும் நான் கண்டேன். ஆகையால், ஸ்ரீ சிவபிரானாரே பரமாத்மா" என்கின்றார். மாயாவாதப் போக்குடைய மற்றொருவர், "நான் ஒரு வஸ்துவைக் கண்டேன். அது நானாகவே யிருந்தது. பிரமன் விஷ்ணு உருத்திரன் முதலியவருள் எவரும் அப்போது என் கண்ணுக்கு அகப்பட்டிலர். ஆகலின், அவரெல்லாம்

பொய். அப் பெயர்களெல்லாம் எனக்கே பரியாயங்கள். நானொருவனே முக்காலு முள்ளேன். ஆகையால், நானே பரப்பிரமம்'' என்கின்றார். சகலமத அநுபவ ஞானிகளும் இப்படியே பேதிப்பர். வேதம் தன்னில் முரணும், அம் முரணை யகற்றுவது அநுபவ ஞானம் என்பார்க்கு அவ்வனுபவத்திலும் அம் முரணுண்டென்பது இப்போதாயினும் விளங்குக.

சாத்திரங்கள் பல. ஆயினும், அவை யனைத்தும் மூவகையா யடங்கும். ஒருவகை கடவுள் செய்தது. சர்வஞ்ஞராகிய அவர் எதனையும் அநுபவித்துத் தெரியவேண்டாம். ஆகலின், அவர் செய்ததே ஞானநூலாகும். வேதமே அந்த ஞானநூல். இன்னொருவகை சீவன்முத்தர் செய்தது. சீவன்முத்தராவார் வேதவழி யொழுகிக் கடவுளை நேரிற் கண்டு வேத வுண்மைக்குச் சாட்சிகளாய் நிற்குந் தூயோர். அவர் செய்ததை அநுபவநூ லெனலாம். தேவார திருவாசகாதிகள் அதிற் சேரும். மற்றொருவகை பாசபந்த முடையார் செய்தது. அதனை மாயைநூ லெனலாம். ''பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்'', ''திரு நான்மறை விளக்கம்'' முதலியன அவ்வகை. சமய தத்துவ ஆராய்ச்சிக்கு அக்கடைவகை சிறிதும் யோக்கிய மாகாது. இடைவகை, முதல்வகையின் வழிச்சென்று பெரிது முபகரிக்கும். முதல்வகை மாத்திரம் எதனையும் பற்றாது சுயமே உபகாரமாம். ஆகவே, வேதமொன்றே பரமாத்ம நிரூபணத்துக்கு முழுதும் ஏற்ற சாத்திர மாதல் காண்க.

நாம் முழுமுதற் கடவுளை நேரிற் கண்டதில்லை. அப் பொருட்காட்சி சாத்தியம். நாம் சாதனத்தி லிருக்கிறோம். நமக்கு வேதத்திலுள்ள கடவுட் பெயர்களே பிரத்தியக்ஷம். சாதகன் பெயரைப் பற்றிக்கொண்டே பொருளுக்குச் செல்ல வேண்டும். பொருளைக் காணுதவன் பெயரையும் அலட்சியஞ் செய்யின் பொருளை எப்போதுமே காணமாட்டான். ஆகவே, சாதகராகிய நமக்கு அப் பெயர்களே பொருள்கள். சொல்லையும் பொருளையும் பேதாபேதமென்பர் தருக்க நூலுடையார். ''மெய்ப்பொருளாவது நாதன் நாமம்'' என்பதுங் காண்க. ஆகலின், நாம் வேதத்திலுள்ள தெய்வப் பெயர்களை யாராய்ந்து பரமாத்மா யாரென்பதற்கு விடை காண்போம். மற்ற நூல்க ளனைத்தும் சர்வாங்கீகார மல்லவாகலின், இங் கெடுத்துக்கொள்ளப்பட வில்லை.

சைவம் வைஷ்ணவம் சாக்தேயம் முதலியனவாக வேத சம்பந்த சமயங்கள் பல. தமிழ்நாட்டில் சைவமும் வைஷ்ணவமுந்தான் பிரபலம். கடவுட் பெயர்கள் பலவற்றுள்ளும் பிரமன் விஷ்ணு உருத்திரன் என்னு மூன்றே முக்கியம். பிரமனுக்கு ஹிரண்யகர்ப்பன் என்றொரு பேருமுண்டு. அவரையே முழுமுதற் கடவுளென்னும் மதத்துக்கு ஹைரண்யகர்ப்ப மென்று பெயர். அஃது எட்டோடு சரி. எஞ்சுவன விஷ்ணுவும் உருத்திரனுமே. பரமாத்ம நிரூபணத்துக்கு அவ் விருவரைப் பற்றிய ஆராய்ச்சியே போதும்.

வேதம் பரமாத்ம நிச்சயம் பண்ணுமிடங்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். ஒன்று விஷ்ணுவே பரமாத்மா வென்னுமிடம், இன்னொன்று உருத்திரனே பரவஸ்து வென்னுமிடம், மற்றொன்று கடவுட்குணங்



களின் திரட்சியே கடவுளென வுருவகிக்கப்படும்: அதுவே விட்டுணு: அதுவே உருத்திரன்: ஆகலின், விஷ்ணுவும்உருத்திரனும் கடவுளின் மறுபெயர்கள்தா னென்னுமிடம். பின்னொன்று உருத்திரன் கடவுள்: ஆனால், அவரினும் மேம்பட்டகடவுள் விஷ்ணுவென்னு மிடம். இறுதியது விஷ்ணு கடவுள்: ஆனால், அவரினும் மேம்பட்ட கடவுள் உருத்திர னென்னுமிடம். முதலிரண்டிடங்களும் ஒவ் வொன்றையே புகழ்கின்றன. ஒன்று புகழப்படும் போது மற்றது விடப்படுகின்றது. இவ்விடங்களில் ஒரு புறுவையும் உயர்த்திப் பேசலாம். 'நமஸ் தேவாயோத்வமேவப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி' (வாயுவே! நமஸ்காரம், நீ பிரத்தியக்ஷப் பிரமமாகின்றாய்), 'த்வம் ராஜன் ப்ரஹ்—மாஸி' (அரசனே! நீ பிராமண னாகின்றாய்) என்பன காண்க. அவ் வீரிடங்களில் ஒவ் வொன்றும் புகழுந் தெய்வம் உயர்ந்ததாகி அநேகேசுரவாதஞ் சித்திக்கும். மூன்றாமிடத்தில் விஷ்ணுவும் உருத்திரனுமே கடவுளாகார். இவ் விடத்தைக் கொண்டு ஆராய்ந்தால் ப்ரமாத்மா யாரென்னும் வினாவிற்குப் பரமாத்மாவே பரமாத்மா அல்லது கடவுளே பரமாத்மா என்றே விடைபிறக்கும். அவ்விடை புனருத்தி யென்னுங் குற்றமாம். 'சிவாய விஷ்ணுரூபாய சிவரூபாய விஷ்ணவே! சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணுர் விஷ்ணோச்ச ஹ்ருதயச் சிவா: யதாந்தரம் நபச்யாமி ததாமேஸ் வஸ்திராயுஷி | யதாந்தரம் நபேதாஸ் யுச்சிவ கேசவ யோஸ்ததா' (விஷ்ணுரூபம் சிவன். சிவரூபம் விஷ்ணு. சிவனிருதயத்தில் விஷ்ணு. விஷ்ணுவிருதயத்திற் சிவன். இருவரிலும் பேதமில்லை) என்பது இவ் விடத்து மேற்கோள். ஆயின், விஷ்ணுவும் உருத்திரனும் பரியாயங்களாக வேண்டுமே. அஃதுண்டா? இன்னும், ஒருவஸ்து சிருட்டி பற்றிப் பிரம னென்றும், திதி பற்றி விஷ்ணு வென்றும், சங்காரம் பற்றி உருத்திர னென்றும் பெயர் பெற்றதெனின் பிரமனுக் குரிய எல்லாப் பெயர்களும் சிருட்டியையும், விஷ்ணுவுக்கு குரிய எல்லாப் பெயர்களுந் திதியையும், உருத்திரனுக் குரிய எல்லாப் பெயர்களுஞ் சங்காரத்தையுமே காட்டவேண்டும். அதுவுமில்லை. அதிகப்பிரஸ்தாப முடைய பிரமா விஷ்ணு உருத்திர னென்னும் முப்பெயருமே அப் பொருள்படாமை யறிக. நாலாமிடம் 'நாராயணாத் ருத்ரோஜாயதே' (நாராயணனிலிருந்து உருத்திரன் பிறந்தான்.) என்பது போல்வது. அவ்வாக்கியம் விரோதமற் றிருந்தால் நலம். ஆனால், 'மமாபி விஷ்ணோர் ஜநகம்' (உருத்திரன் எனக்கும் விஷ்ணுவுக்கும் பிறப்பிடமானவர்) என மற்றும் பல வாக்கியமுள. இவ் விருவசனங்களுக்கும் அவிரோதப் பொருள் கொள்ளவேண்டுவது அவசியம். எப்படிக் கொள்வதெனிற் கூறுதும். தூணிலிருந்து நரசிங்கம் வெளிப்பட்டது. வெளியிட்டதூண் தாழ்ந்தது. வெளிப்பட்ட நரசிங்கம் உயர்ந்தது. சிவனிலிருந்து முருகன் வெளிப்பட்டான். வெளியிட்ட சிவனும் வெளிப்பட்ட முருகனும் சமம். பிரமத்திலிருந்து உலகு வெளிப்பட்டது. வெளியிட்ட பிரமம் உயர்ந்தது. வெளிப்பட்ட வுலகு தாழ்ந்தது. இம் மூவகையுள் நாராயணனில் உருத்திரன் தோன்றுவது முதல் வகையிலும், உருத்திரனில் விட்டுணு தோன்றுவது மூன்றும் வகையிலும் அடங்கும். அப்படித்தா னடங்கு மென்பதைப் பின் வருவனவற்றால் தெளிக. ஐந்தாமிடம், ''பராத் பரதரோ ப்ரஹ்மா தத்பராத் பரதோ ஹரி: தத் பராத் பரதோ ஹீசஸ் தஸ்மாத் துல்யோதிகோ நஹி'' (மேலுக்கு மேல் பிரமன். அவருக்குமேல் விஷ்ணு. அவருக்கு மேல்

உருத்திரன். அவருக்கு நிகராவாரு மேலாவாரும் இல்லை.) என்பது. இதற்கு விரோத வாக்கியங்கள் கிடையா. இவ்விட மொன்றே கடவுள் நிச்சயத்துக்கு முழுவதும் ஏற்றது. இவ் விடத்தை ஒப்பு நோக்கு எனலாம். இதிலுள்ள பிரஹ்ம ஹரி ஈச பதங்கள் எய்தாத தெய்துவித்தல் (அபூர்வ விதி). பிரமனும் அரியும் பரமல்ல வெனல் எய்திய தொருமருங்கு மறுத்தல் (பரிசங்கியா விதி). ஈசன் பரம், அதற்குச் சமமு மதிகமு மில்லை யெனல் எய்திய திகந்துபடாமை காத்தல் (நியமவிதி.)

மற்றொன்றை வணங்குதலென்பது எவ்வாற்றானும் பரமாத்மவிலக்கண மாகாது. சர்வாத்மாக்களாலும் வணங்கப்படுவதே பரமாத்ம லக்ஷணம். 'தக்ஷிணஸ்யாம்திசி விஷ்ணு: க்ருத்வைவ மூர்த்தாஞ்சலிம் மாமுபாஸ்தே' (தக்ஷிணத்தில் விஷ்ணு தலையிற் குவித்தகைகளை யுடையவராகி என்னையே உபாசிக்கிறார்) 'நாராயண பரோத்யாதா' (நாராயணன்மேலான தியானிக்கிறவன்), 'ராம ஏவ பரந்தப:' (ராமனே மேலான தவசி), 'ப்ரஹ்ம விஷ்ணவாதிபிஸ் ஸேவ்யம்' (பிரமவிஷ்ணு வாதியராற் சேவிக்கப்படுபவர்) முதலியவற்றால், விஷ்ணு வணங்குகிறவரென்றும், 'சிவ ஏகோத்யேய' (சிவனொருவனே வணங்கப்படுபவன்), 'த்யாயீதேசானம்' (தியானிக்கப்படத்தக்கவன் ஈசானன்), 'சிவ ஏவஸதாத்யேய' (சிவனொருவனே எப்போதும் வணங்கப்படத்தக்கவன்), 'ஸர்வோவைருத்ரஸ் தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' (எல்லாம் உருத்திரன். அப்படிப்பட்ட உருத்திரனுக்கு நமஸ்காரம் ஆகுக) முதலியவற்றால் உருத்திரன் வணங்கப்படுபவரென்றுந் தெரியலாம்.

மக்களுள் ஆடவரே உயர்ந்தவர்; பெண்டிர் தாழ்ந்தவர். "துர்லபம் ப்ராப்ய மாநுஷ்யம் தத்ராபி நர விக்ரஹம்" (மனித சரீரம் அருமையானது. அதனினும் அருமையானது புருஷ சரீரம்) என்பது காண்க. ஆகையாற்றான் விட்டுணுவும் புருஷோத்தமனெனப் புகழப்படுவர். ஆனால், "ருத்ராத்ப்ரவர்த்ததே பீஜம். பீஜயோ நிர்ஜநார்தந:" (உலக சிருட்டிக்கு உருத்திரன் பீஜம், விஷ்ணு யோநி) என்னும் ஒப்புநோக்கு வாக்கியத்தால் விட்டுணு பெண்ணாகின்றார். உருத்திரன் ஆணாகின்றார்.

அரச னுடையாளங்களையே அடிமை யணிவான். அடியா னுடையாளங்களை அரச னணியான். விட்டுணு பரமாயின் அவ ருடையாளத்தை உருத்திர னணியவேண்டும். விட்டுணு வுடையாளம் நாம மென்பர். உருத்திரன் பரமாயின் அவ ருடையாளத்தை விட்டுணு வணியவேண்டும். உருத்திர னுடையாளம் விபூதி. "சிவ வக்ஷஸ்ஸ்திதம் நகே நாதாய ப்ரணவே நாபி மந்த்ர்ய காயத்ர்யா பஞ்சாக்ஷரேணாபி மந்த்ர்ய ஹரிர் மஸ்தககாத்ரேஷு ஸமர்பயேத் ததா ஹ்ருதித்யாயஸ் வேதி ஹரி முக்த்வாஹர: ஸ்வஹ்ருதித்யாத் வாத்ருஷ்டோத்ருஷ்ட இதி சிவமாஹததோ பஸ்ம பக்ஷயேதி ஹரிமாஹ ஹரஸ்தத: பக்ஷ இஷ்யே சிவம் பஸ்மஸ்நாத்வாஹம் பஸ்மநா புரா, ப்ருஷ்ட்வேச்வரம் பக்திகம்யம் பஸ்ம பக்ஷயதச்யுத: தத்ராச்சர்ய மபூவாஸீத் ப்ரதிபிம்ப ஸமத்யுதி: வாஸுதேவச் சுத்த முக்தா பலவர்ணோ பவத்க்ஷணாத்" (சிவபிரான் றனது மார்பிலிருந்த பஸ்மத்தை நகத்தாலெடுத்துப் பிரணவம், காயத்திரி, பஞ்சாக்ஷர மிவற்றானே யபிமந்திரித்து விட்டுணுவின் சிரசு முதலிய அங்கங்களிற் பூசி இதயமுதல் நினது ஹிருதயத்தில் ஈசுவரத்தியானஞ் செய்யென் றருளியபடியே விட்டுணுவுந் தியானஞ்செய்து சிவத்தைக் கண்டேன்கண்டேனென்று சிவனையணுகி யானந்தமாயினன். பின்பு ஈசன்பஸ்மாவை நாவிலிட்டுக்கொள்ளென் றருளிச்செய்ய, அப்படியே யென்று பஸ்மத்தை முதலி லுடம்பெங்கும் பூசிக்கொண்ட அச்சுதன் ஈச னுத்தரவின்படி யதனை யுட்கொண்டனன். கொள்ளவே, ஆச்சரியமாகப் பரமசிவப் பிரதிபிம்பமெனக் காந்தியைப் பெற்றுத் தூய முத்தொத்த வெண்ணிறத்தனாயினன் அவ் வச்சுதனாகிய வாசுதேவன்) என்னும் வசனம் விட்டுணு விபூதி தரித்துக்கொண்டதை விளக்கும்.



எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அவ் வணக்கம் விஷ்ணுவுக்குப் போனால் அவரே பரம். உருத்திரனுக்குப் போனால் அவரே பரம். 'ஸ்தோமம் வோகத்ய ருத்ராய சிக்வஸே, க்ஷயத் வீராய நமஸாதி திஷ்டந ஏபிச் சிவஸ் ஸவாம் ஏவ யாவபி: திவஸ்ஸிஷக்தி மருதோ நிகாமாபி:" (ஓ தேவர்களே! உங்களைக் குறித்து நாங்கள் செய்த தோத்திரங்களையும் வணக்கங்களையும் எல்லாம்வல்ல உருத்திர மூர்த்தியினிடத்து அர்ப்பியுங்கள். அவற்றிற்கெல்லாம் உரியவர் அவரேயாம். அவர் நீங்கள் கொண்ட வெண்ணத்தை நிறைவேற்றி உங்களை அனுக்கிரகிப்பர்.) என்னும் வாக்கியம் அவ் வணக்கம் உருத்திரனுக்கே போமென்கின்றது. "ஸர்வதேவநமஸ்காரம் கேசவம் பிரதி கச்சதி" யென்பது வேதமன்று.

உருத்திரனை விஷ்ணு சங்கரித்தால் விஷ்ணுவே பரம். விஷ்ணுவை உருத்திரன் சங்கரித்தால் உருத்திரனே பரம். "ஹரிக் ஹரந்தம் பாதாப்யாம்" (ஹரியை ஹரிக்கின்ற பாதம்) "யோமத்ஸ்ய கூர்ம வாராஹ ஸிம்ஹாந் விஷ்ணும் க்ரமந்தம் வாமன மாதிதேவ: விவிக்லபம் பீட்யமானம்" (மச்ச கூர்ம வராக நரசிம்ம வாமனங்களை இம்சித்தவரும்) என்பன விஷ்ணுவை உருத்திரன் சங்கரித்தாரெனக் காட்டுகின்றன.

விஷ்ணு உருத்திரன் என்பவர்களில் விஷ்ணு பிராமண ராயின் அவரே பரம். உருத்திரன் பிராமணராயின் அவரே பரம். "த்வம் தேவேஷு ப்ராஹ்மண:" (நீர் தேவர்களுள்ளே பிராமணர்) என்னும் வசனம் உருத்திரனைச் சுட்டிப் பிராமண ரென்கின்றது.

வைகுண்டம் விட்டுணுபதம். கயிலாசம் உருத்திரபதம். கயிலாசத்தினும் வைகுண்டம் மேலாயின் விட்டுணு பதி. வைகுண்டத்தினுங் கயிலாயம் மேலாயின் உருத்திரன் பதி. "ஷஷ்ட்யா மிந்த்ரஸ்ய ஸாயுஜ்யம் ஸப்தம் யாம் வைஷ்ணவம் பதம், அஷ்டம்யாம் வ்ரஜதே ருத்ரம் பசூநாம் பதிம் ததா" (ஆறாவதான இந்திர சாயுஜ்யத்தின்மேலே ஏழாவதாக வுளது விட்டுணுபதம். அதன்மேல் எட்டாவதாக வுளது உருத்திரபதம்) என்னும் வாக்கியத்தால் வைகுண்டத்துக்குமேல் கயிலாயு மென்பது விளங்குகின்றது.

உலகமாயிருத்தல் உலகத்தைக் கடந்திருத்தல் என இருத்தல் இருவகை. உருத்திரன் உலகமாயிருந்து விட்டுணு உலகத்தைக் கடந்தவராயிருந்தால் விட்டுணுவே பரம். விட்டுணு உலகமாயிருந்து உருத்திரன் உலகத்தைக் கடந்தவராயிருந்தால் உருத்திரனே பரம். "விஸ்வம் நாராயண:" (உலகமாயிருப்பவர் நாராயணன்), "விஸ்வாதிகோ ருத்ர:" (உலக

த்தைக் கடந்தவரா யிருப்பவர் உருத்திரன்) என்பவற்றால் உருத்திரனே உலகத்தைக் கடந்தவன் என்பது தெரிகிறது.

வியாபகம் மேலிட்ட நிறைவு. வியாப்பியம் வியாபகத்துக் கடங்கிய நிறைவு. உருத்திரன் வியாப்பியமா யிருந்து விட்டுணு வியாபகமாயிருந்தால் விட்டுணுவே பரம். விட்டுணு வியாப்பியமா யிருந்து உருத்திரன் வியாபகமாயிருந்தால் உருத்திரனே பரம். "வ்யாப்யம் நாராயண:" (நாராயணன் வியாப்பியன்), "ஸர்வ வ்யாபீச பகவாந்தஸ்மாத் ஸர்வ கதச்சிவ:" (எல்லாவற்றையும் வியாபித்தவன் பகவா னாதலின் எங்கும் நிறைந்தவன் சிவனும்) என்பன நாராயணன் வியாப்பியனெனவும் உருத்திரனே ஸர்வ வியாபகனெனவுங் காட்டுகின்றன.

இப்படி விட்டுணுவுக்கும் உருத்திரனுக்குமுள்ள தாரதம்மியங்களை விளக்கும் பகுதிகள் பலவுள. அவை யனைத்தாலும் பரமாத்மா உருத்திரனே; விட்டுணு வல்லரென்பது சித்திக்கின்றது. ஆனால், வேதத்தில் திரிமூர்த்திப் பிரஸ்தாபமே முடிவா யிருக்குமானால் மட்டும் அவ் வுருத்திர பரத்துவம் பொருத்தமாகும். திரிமூர்த்திக்கு மேலும் ஒரு மூர்த்தி யுண்டென்று வேதம் விளம்பிவிடின் அந் நாலாவது மூர்த்தியே பரமாத்மாவாவர். ஆகலின், அதில் சதுர்த்த மூர்த்திப் பிரசங்க முண்டா வென்பதையும் ஈண்டாராய்வாம். "ப்ரபஞ்சோப சமம் சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம்" (பிரபஞ்ச லயஸ்தானமாய், சாந்தமாயிருக்கின்ற சிவமெனும் அத்வைத வஸ்துவை நான்காவது தெய்வமாக நினைக்கின்றனர்) என்னும் வாக்கியம் ஐந்து உபநிஷத்துக்களிற் சிறிதும் மாறுபடாமல் வருகின்றது. அதனால், நாலாவது மூர்த்தி யுண்டென்பதும், அது சிவநாமமுடைய தென்பதும் தெரியலாயின. விட்டுணு நாராயண கோவிந்தாதி நாமங்களால் அவ ரழைக்கப்படாமையுங் கருதத்தக்கது. "ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தேஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹபூதைர் நகாரணம் காரணாநாம் த்யாதா காரணந் துத்யே யஸ்ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ் ஸர்வேச்வரச் சம்புராகாஸமத்யே" (பிரமன் விட்டுணு உருத்திரன் இந்திரனாகிய இவர்களெல்லாம் படைக்கப்படுகின்றனர்...... ஆகலின் அவர்கள் காரண ராகார்......அவர்களால் தியானிக்கப்படுந் தியேயனாவான்......சர்வேசுரன், சம்பு) என்பது அவர் மும்மூர்த்திக்கும் மேற்பட்டவரெனக் காட்டுகின்றது. ஆனால், நாலாவது மூர்த்தியின் பெயர்களாகிய சிவசம்பு வாதிகள் ஒன்றும் விடாமல் மூன்றா மூர்த்தியாகிய உருத்திரனுக்கும் வருதலுண்டு. அது அவ் விரு மூர்த்திகளையும் ஒருவரேயெனச் சிலர் மயங்குதற் கிடஞ்செய்யும். மேல் வசனத்தில் மூன்றாமூர்த்தி பிரம விட்டுணுக்களோடு சேர்த் தொதுக்கப்படுவதைக் கண்டு அறிஞர் அம் மயக்கத்தை நீக்கிக்கொள்ள வேண்டும். "விஷ்ண்வாதிகாந்ஸுராந்" (விட்டுணு முதலிய தேவர்கள்), 'ஸர்வே தேவா: பசுதாம் வாபு:' (எல்லாத் தேவர்களும் பசுக்கள்), 'ப்ரஹ்ம விஷ்ணு வீசாநேந்த்ராதீ நாம்......... ஜீவ:' (பிரம விட்டுணு உருத்திர இந்திரர் முதலினோர் ஜீவர்கள்) என்பனவற்றால் திரிமூர்த்தியுள்பட எல்லாத் தேவரும் பசுக்களாகின்றனர். பசு, ஜீவன்—உயிர். ஆகலின், அவர்களிடங் குறைகளிருப்பதியல்பு. சதுர்த்த வஸ்துவாகிய ஸ்ரீ சிவபிரானாரே 'ஸர்வஜ்ஞ:......ஈச: பசுபதி' (சர்வஞ்ஞர் ஈசன் பசுபதி) என்றபடி சுயமே பசுபதியாகின்றனர். பசுபதி சர்வஜீவர்களுக்குங் கர்த்தா. ஆகலின், அவரொருவரே இறையுங் குறைவற்றவர். வேதத்தில் விட்டுணுவுக்குப் போன்று உருத்திரனுக்கும் பல அபகர்ஷங்கள் கூறப்படலாம். 'த்யாதா ருத்ர' (உருத்திரன் தியானிக்கின்றவர்) என்பதுங் காண்க. மூன்றாம் நாலாம் மூர்த்திகட்குள்ள பெய ரொற்றுமைபற்றி அவ் வபகர்ஷங்களை நாலாம் மூர்த்திக்கு ஏற்றுவாரு முளர். அறிஞர் மேற்கண்ட நியாயங்களால் அபகர்ஷங்களை மூன்றாம் மூர்த்திக்கும் உத்கர்ஷங்களை நாலா மூர்த்திக்குமே சமர்த்தித்து மகிழ்வர்.



இனி, ஆராய வேண்டுவது அச் சதுர்த்த வஸ்துவைப் பரமாத்மாவாகக் கொள்ளுஞ் சமயம் ஈதென்பது. வைஷ்ணவத்தில் இரண்டா மூர்த்தியாகிய விட்டுணுவே பரவஸ்து. நாலாம் மூர்த்திப் பேச்சு அதிலில்லை. நாலாயிரப் பிரபந்தத்தில் 'மூவர் முதல்வன்' எனக் காணப்படுகின்றது. அம் மூவர் இன்னா ரென்பதற்கு அப்பிரபந்தத்தில் விவரங் கிடையாது. பாஞ்சராத்திரப்படி பிரத்யும்ந அநிருத்த சங்கர்ஷணர்களே அம் மூவர். ராமாநுஜரும் சதுர்த்தமென்னுஞ் சுருதிக்கு அம்மூவரின்மேம்பட்டவரென்றே பொருள் கொண்டார். பிதா குமாரன் பரிசுத்தஆவி போல் அம்மூவரும் சுருதிக்கு விலக்கானவர். அப் பிரத்யும்நாதியர் விட்டுணுவினிடமிருந்து வெளிப்பட்டவராகலின் பிரபந்தத்து 'மூவர் முதல்வன்' வேதத்திரண்டா மூர்த்தியே யாதல் உறுதிப்பட்டது. இனிச் சிலர் சைவ சமயக் கடவுள் மூன்றா மூர்த்தியாகிய உருத்திரனே யென்பர். அவரெல்லாஞ் சைவ சாத்திர பரிசீலனை சிறிது மில்லாதவர். சைவ சமயத்தைக் கண்டிக்கப் புறப்பட்ட வைஷ்ணவமாயாவாத முதலிய பிறசமயத்தவரடங்கலும் அவ் வுருத்திர பரத்துவத்தைக் கண்டித்துச் சைவங் கண்டிக்கப்பட்டதாக எண்ணி விட்டனர். அவ் வுருத்திரனைப் பரம் பொருளென்னும் மதத்துக்குப் பாசுபத மென்று பெயர். வைதிக சைவமே அவ் வுருத்திர பரத்துவத்தை மறுத்து அம் மதத்தைக் கீழ்ப்படுத்தி யிருக்கின்றது. "இரணியகருப்ப மதத்தையும் மறுத்தற்பொருட்டுப் படைப்புக் கடவுளையும் உடன் கூறினார்; கூறவே, இவரோடு ஒருங் கெண்ணப்படுஞ் சங்காரக் கடவுளும் இவரோடு தோன்றி யழிவனெனப் பாசுபதர் முதலியோரையும் இதனானே மறுத்தவா றாயிற்று" என்பது சைவ பாஷ்யம். ஆனால், சைவருள்ளும் பலர்க்கு இவ் வுண்மை தெரியாது. வைதிக சைவம் சதுர்த்த வஸ்துவாகிய பரமசிவனைப் பரம்பொருளென வந்திக்கின்றது. "மூவரறியாச் சிந்துரச் சேவடியான்", "மூவரு மறிகிலர் யாவர்மற் றறிவார்", "மூவரு முப்பத்து மூவரு மற்றொழிந்த, தேவருங் காணாச் சிவபெருமான்", "மூவராய முதலொருவன்", "மூவருந் தனதா மூல முதற் கருவை", "அவனன்றி மூவரா லாவதொன் றில்லை", "மூவருக் கறிவரும் பொருள்" என்பனவாதிய பல பிரமாண வாக்கியங்களால் அவ் வுண்மை விளங்கும். அவ் வசனங்கள் திருமுறையி லுள்ளன. எப்படி வைஷ்ணவர்களுக்கு நாலாயிரப் பிரபந்தம் பிரமாணமோ அப்படிச் சைவர்களுக்குப் பன்னிருதிருமுறை பிரமாணம். ஆனால், அத் திருமுறையே தான் குறிப்பிடுந் திரிமூர்த்திகளை யின்னாரென விளக்கவேண்டும். இன்றேல் பிரபந்த மூவர்போல் திருமுறை மூவரும் வேத விகிதராய் விடுவர். விடவே, வேதத்திற் கண்ட சதுர்த்த சிவன்தான் சைவ

சமயக் கடவுளென்பதும் பொய்யாகும். ஆனால், திருமுறை 'விரைமலரோன் செங்கண்மால் ஈசனெனு மூவராய முதலொருவன்', 'வீரன் அயன் அரியாரு மறியா வகை யெங்களீசர் பரிசுகளே' என அம் மூவரையும் பிரம விஷ்ணு ருத்ரரே யென்று நன்கு வெளிப்படுத்திவிட்டது. நாலாவது வஸ்து பிரத்யும்நாதியரைக் கடந்ததன்று. பிரமனாதியரையே கடந்தது என்பதற்கு "அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீதமேக மாசாஸ்யம் பகவந்தக் சிவம்" என்பது சுருதி. சில வைஷ்ணவர் பிரபந்த மூவரையும் வேத மூவரையும் ஓரினமாக்கிப் பிரபந்த நாலாம் பொருளை வேத நாலாம் பொருளாக்க முயலுவர். இருவகை மூவரையும் ஓரினமாக்க வேதத்தி லிடமில்லை. இருவகை முப்பெயர்களும் பரியாயங்களு மாகா. இன்னொரு சிலர் "நாலாம் வஸ்துவுக்குப் பரப்பிரமமென்றே பெயர். அது மங்கலமா யிருத்தலாற் சிவமென்றுஞ் சொல்லப்படும்" என்பர். யாம் "அந்த வஸ்துவுக்குச் சிவமென்றே பெயர். அது மிகவும் பெரிதா யிருத்தலின் பரப்பிரமமென்றுஞ் சொல்லப்படும்" என்று அவ் விவகாரத்தைத் திருப்பினால் அவரென்ன செய்வார்? ஆகலின், அவர் சிவ நாமத்திற்கொண்ட அசூயையால் அங்ஙனம் பிதற்றுகின்றாரென விடுக்க. சற்று முன் காட்டிய சுருதியில் அவ் வஸ்து சிவமென்றே யழைக்கப்படுவதை யவர் கூர்ந்தறிக. திருமுறையும், 'சிவனெனு நாமமல்ல தறையோம்' 'சிவனெனு நாமந் தனக்கே யுரிய செம்மேனி யெம்மான்', 'மூவரும்...... காணாச் சிவபெருமான்' என் றருளிச்செய்தது. ஆகவே, இதுகாறும் ஆராய்ந்தவாற்றால் இந்தக் கட்டுரையின் தலைப்பாகிய "பரமாத்மா யார்?" என்னும் வினாவிற்கு இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் சதுர் வேதங்களாலும் பிரமா விஷ்ணு உருத்திரன் என்னுந் திரிமூர்த்திகளுக்கும் மேம்பட்டவராய்ப் பிரஸ்தாபிக்கப்பட்டவரும் வைதிகசைவசமய முழுமுதற் கடவுளுமாகிய ஸ்ரீ சிவபிரானார் என்பதே விடையாதல் காண்க. யாம் அப் பெருமானாரது பரத்வ நிரூபணத்துக்கு இன்னுஞ் சில சுருதி வசனங்களை யெடுத்துக்காட்டி இவ் வியாசத்தை முடிக்கின்றேம்

## சிவனே ஜனனமரண மற்றவர்.

"அஜாத இத்யேவ கச்சித்பீரு: ப்ரபத்யதே ருத்ரயத்தே தக்ஷிண முகம் தேநமாம் பாஹி நித்யம்" (ஜனன மரண சம்சாரத்துக்குப் பயந்த ஒருவன் பிறக்காதவனென்றே உன்னை வழிபடுகின்றான். ஏ ருத்ரா! எது உனது தென்முகம். அதனால் என்னை நித்தியமுங் காப்பாயாக.)

## சிவனே ஓங்காரம்.

"அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ உகாரம் விஷ்ணும் ஹ்ருதயே மகாரம் ருத்ரம் ப்ரூமத்யே ஓங்காரம் ஸர்வேச்வரம் த்வாதசாந்தே" (அகாரமென்னும் ஸ்தூலனாகிய பிரமனை நாபியிலும், உகார மென்னும் சூக்ஷ்மனாகிய விஷ்ணுவை இருதயத்திலும், மகாரமென்னுஞ் சூக்ஷ்மதரனாகிய உருத்திரனைப் புருவ நடுவிலும், சூக்ஷ்மதமனாகிய சர்வேச்சுவரனைத் துவாதசாந்தத்திலும் தியானிக்கவேண்டும்.) ஈசுவரன் சிவநாமமென்பது சிவன்கோயிலை ஈசுவரன் கோயி லென்பதனாலு மறியப்படும்.

## சிவனே அக்ஷரம்.

"சதாசிவோக்ஷரம்" (சதாசிவன் அக்ஷரம். அக்ஷரம் - அழிவற்றது.)



## சிவனே துரீயம்.

"ஜாகரிதே ப்ரஹ்மா ஸ்வப்நே விஷ்ணு: ஸுஷுப்தௌ ருத்ரஸ் துரீய மக்ஷரம்" (ஜாக்கிரத்தில் பிரமா, சொப்பனத்தில் விஷ்ணு, சுழுப்தியில் உருத்திரன், துரீயம் அக்ஷரம்.)

## சிவனே பிரஹ்மம்.

"ருத்ரஸ்ய பகவாந்யச்ச ப்ரஹ்ம" (எவன் பிரமமோ அப் பகவான் உருத்திரன்.)

## சிவனே பரப்ரஹ்மம்.

"பரம்ப்ரஹ்ம...... மஹேச்வரம்" (மகேசுவரன் பரப்பிரமம்.)

## பொது நீக்கிய சிவோபாசனை.

"சிவ ஏகோத்யேய: சிவங்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய" (மற்றவையெல்லாம் விடத்தக்கவை. சுகத்தைச் செய்வதாகிய சிவமொன்றே தியானிக்கற்பாலது.)

## சிவலிங்கோபாசனை.

"சிவலிங்கம் த்ரிஸந்த்ய மஹர ஹரப்யர்ச்சயேத்" (சிவலிங்கத்தைத் தினந்தோறும் காலை மாலை உச்சி யென்னும் முப்பொழுதினும் பூசிக்க.)

## சிவோபாசகரே அன்ன மருந்துபவர்.

"அந்தரிச் சந்திதம் ஜநே ருத்ரம் பரோ மநீஷயாக் ருப்ணந்தி ஜிஹ்வயாஸஸம்" (சனங்களிடத்து அந்தரியாமியாய் நிற்கும் பரனாகிய அந்தச் சிவபெருமானைச் சிவசத்தியோடு பற்றுகின்றவர்களே அன்னத்தை நாவினாற் கிரகிக்கின்றார்கள்.)

## சிவ நின்மாலியமே புசிக்கத்தக்கது.

"அஹர ஹரப்யர்ச்ய விச்வேச்வரம் லிங்கம் தத்ர ருத்ர ஸூக்தோரபிஷிச்ய ததேவஸ் நபநம் பயஸ்த்ரி பீத்வா மஹா பாதகேப்யோ முச்யதே நசோக மாப்நோதி முச்யதே ஸம்ஸார பந்தநாத் தத நப்யர்ச்யநாச் நீயாத் பலமந்நமந்யத்வாயதச்நீயாத்ரேதோ பக்ஷீபவேத்" (நாடோறும் விசுவேச்வர லிங்கத்தை யர்ச்சித்து அவ் விலிங்கத்தில் உருத்திர சூத்தங் கொண் டபிடேகஞ் செய்து அவ் வபிடேக நீரை மும்முறை குடிப்போன் மாபாதகங்களினின்று நீங்குகின்றனன். அவன் சோகத்தை யடையான். குடும்ப பந்தத்தினின்றும் விடுபடுகின்றனன். எவரும் அவ் விலிங்கத்தை யர்ச்சியாம லுண்ணலாகாது. பழத்தையேனும், அன்னத்தையேனும், மற்றெதனையேனும் புசிக்கொண்ணாது. சிவ நிவேதிதமிலாது அவற்றை யொருவன் புசிப்பனேல் அவன் இரேதசையே புசித்தவனாவான்.)

## சிவோபாசனையின்றி முத்தி யில்லை.

"யதாசர்ம வதாகாசம் வேஷ்ட யிஷ்யந்தி மாநவா: ததாசிவ மவிக்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி" (எப்பொழுது மனிதர்கள் ஆகாசத்தைத் தோலாடையாக எடுத்துப் போர்த்துக் கொள்வார்களோ அப்பொழுது தான் சிவனையறியாமல் பாசக்ஷயமாகிய துக்க நிவர்த்தியை யடைவார்கள்.)

## விபூதி.

"ஏவம் பஸ்ம தாரணம்.........தர்மஸ்ஸநாதன.........ப்ராஹ்மண: அக்ருத்வாப்ரமாதே நைத தஷ்டோத்தா சதம் ஜலமத்யே ஸ்தித்வா காயத்ரீம் ஜபத்வோபோஷணே நைகேநசுத்தோ பவதி" (பஸ்மதாரணமே சநாதன தர்மம்......பிராஹ்மணன் அசட்டையாலே யிதனைச் செய்யாக்கால், அதற்குப் பரிகாரமாக நீர்மத்தியிலிருந்துகொண்டு 108 காயத்திரி ஜபித்து ஒருபவாச மிருந்தாக்காற் சுத்தனுவான்.)

"ஏஷாங்கோபோபவேத் ப்ரஹ்மந் லலாடே பஸ்மதர்சநாத், தேஷாமுத்பத்தி ஸாங்கர்ய மநுமேயம் விபிச்சிதா" (ஒருவரது நெற்றியிற் பஸ்மத்தைப் பார்த்தமட்டில் எவர்க்குக் கோபமுண்டாகிறதோ அவர் பல பெயர்க்குப் பிறந்தோ ராவரென்பது பண்டித ரறியத்தக்கது.)

## உருத்திராக்ஷம்.

"ருத்ராக்ஷா ஜாதாஸ் ஸர்வாநுக்ரஹார்த்தாய தேஷாம் நாமோச்சாரண மாத்ரேண தச கோப்ரதாநஸ் பர்சநாப்யாம் த்விகுண பலம்" (அனைவர்க்கும் அநுக்கிரகஞ் செய்யும்பொருட்டு உருத்திராக்ஷங்க ளுண்டாயின. அவற்றின் பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே பத்துக் கோதான பலனும். அவற்றைக் காண்டல் தீண்டல்களுக்கு மேலும்மேலும் இரட்டிப்பாகு பலனும்.)

## பஞ்சாக்ஷரம்.

"தாரகம் சைவம் மநுபதிசாமி: தத்ரைவ முக்த்யர்த்த முபதிச்யதே சைவோயம் மந்த்ர: பஞ்சாக்ஷர:பரமோ மந்த்ரஸ்தார கோயம் பஞ்சாக்ஷர:" (தாரகமாகிய சைவ மந்திரத்தை யுபதேசிப்பேன். அங்கு முக்திக்காக உபதேசிக்கப்படுவது சைவ மந்திரமாகிய பஞ்சாக்ஷரமே. இப் பரமமாகிய சைவ பஞ்சாக்ஷரமே தாரகமாம்.)

## சுட்டெரிக்க வேண்டியவை.

"திக்பஸ்ம ரஹிதம் பாலம் திக்ராமம் சிவாலயம், திக்நீசார்ச்சநம் ஜந்ம திக்வித்யா மசிவாச்ரயாம்" (பஸ்ம மணியாத நெற்றியைச் சுடு. சிவாலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து. சிவார்ச்சனை யில்லாதவன் ஜன்மத்திலே தீயை வை. சிவனை ஆச்சிரயிக்காத சாஸ்திரங்களை யெரித்துவிடு.)

---

## வரன்முறை.

மிருகங்கள் என்றும் ஒரே இயல்புடையன. ஆகையால், அவற்றிற்குக் கட்டுத்திட்டங்கள் வேண்டாம். மாந்தர்க்கு மனவுணர்ச்சியுண்டு. அது எப்போதும் சகவாச வஸ்துக்களுக்கு வசப்பட்டது. ஆகலின், அது மேலும் ஏறும், கீழும் இறங்கும். அதனைக் கீழிறங்க வொட்டாமல் தடுத்து மேல்நோக்கிச் செலுத்தி மக்களை வாழ்விக்க வேண்டுவது இன்றியமையாதது. வரன்முறைகள் அப்பொருட்டே மக்களிடம் ஏற்பட்டன.

மே. சுப்புசாமி.

உ

# கலியின்வலிமை கண்டஞ்சார்.

---

உத்தம வேதிய ரொருவர் கருப்பஞ் சோலையைக் கண்ணுற்று அச்சோலையுட் சென்று ஒரு கரும்பயின்று, அதன்விலையை அதற்குரியவன் அடைய, அங்குள்ள கேணிக்கரையில் வைத்துச் சென்றார்.

அவர் செல்லுகையில் ஒருவன் மதுக்குடம் தலைக்கொண்டு அவரை வழிமறித்து, 'ஏ! பிராமணு! கள்ளருந்தினதற்குக் காசு கொடு.' என்றான். அவர் திகைத்து, "நான் ஒழுக்கம் தவறாத பிராமணன். நான் கள்ளருந்தவாவது, காசு தரவாவது, என்ன அநியாயம்! ஆளடையாளம் தெரியாமற் கேட்கின்றாய் போலும்" என்றார். கள் விற்போன், ஆ! ஆ!! உன் சாமர்த்தியம் நன்றாயிருக்கிறது. நீயே கள்ளுண்டவனும், காசு கொடுக்க வேண்டியவனும் என்று வன்மை பேசி மறியல் செய்து நியாயாதிபதியிடம் அழைத்துச் சென்று தன் வழக்கைச் சாற்றி, "பிராமணன் கள்ளருந்தினன்; காசு தரவேண்டும்" என்றான். பிராமணர், "நான் கள்ளருந்தினது மில்லை; காசு தரவேண்டியது மில்லை. அவன் செயல் ஏதோ சூழ்ச்சியாயிருக்கிறது" என்றார்.

நீதிபதி உண்மை யுணர்ந்து நிச்சயிக்க முடியாமல், "வேறு சாட்சி யுண்டா?" என வினவினர். கள் விலைஞன், "அவர் வாந்தி செய்யட்டும் ருசுப்பிக்கிறேன்" என்றான். அப்படியே நீதிபதி கட்டளையிட, பிராமணர் வாந்திபண்ணினர். வாந்தியான நீரில் ஈக்கள் மொய்த்தன. நீதிபதியவர்களே! மதுவாசனையும், அதில் ஈ மொய்த்தலையும் பார்த்தீர்களா? இம் மனிதன் கள்ளுண்டான் என்பதற்கு இன்னமும் சந்தேகமா? காசுதர உத்தரவிடுங்கள்" என்றான்.

பிராமணர், "ஐயோ! நான் வாந்தி செய்தது கரும்பின் சாரம். அதில் ஈ மொய்த்ததுகண்டு கள்ளருந்தியதாகக் கொள்ளக் கூடாது. இது பணத்தோடு போவதல்லாமல், இழிவான மதிப்புக்கும் இடமாவதால், வாதி சொல்வதை உண்மை யென நம்பக் கூடாது. என்னை நிரபராதி யெனக்கொண்டு வழக்கைத் தள்ளிவிடவேண்டும்" என்றார். அந் நீதிபதி கருப்பஞ்சாற்றிலும் ஈ மொய்க்கும் என்பதை யுணராமல், கள்ளுண்டதாகவே தீர்மானித்துக் கள்விலைஞனுக்குக் காசு கொடுக்கக் கட்டளையிட்டார்.

பிராமணர் கள் விலைஞனுக்குக் காசு கொடுத்துவிட்டு, விபரீதத்தை நினைந்து மனநைந்து விசாரமுற்றிருந்தனர்.

அடுத்த நாள் தெருவழியே செல்ல, ஓர் புலை விலைஞன் வந்து வழிமறித்து, "ஏ! பிராமணு! நீ வாங்கின மாமிசத்துக்கு விலை

கொடு" என்றான். பிராமணர் பெரிதும் திகைத்து நடுங்கிச் சோர்ந்து, "ஐயோ! இஃதென்ன விதிவசம்! நான் எதற்காக மாமிசம் வாங்கினேன்? நேற்றொருவன் மதுவுக்குக் காசுகொடு என்று வம்பு பேசி மறியல் செய்து காசுவாங்கி மரியாதையைக் குறைத்தான். இன்று இவன் மாமிசம் வாங்கினாய் காசுகொடு என்கிறான். சோதனைக் காலம்போலிருக்கிறதே! காரணம் யாதாயிருக்கலாம். நம்முடைய நல்லொழுக்கத்திற்கு ஒவ்வாததாய், நேற்று வந்த—இன்றுவந்த இவர்கள் யாராயிருக்கலாம். இம்மனிதனை நயந்து கேட்டுத் தெளிவோம்." எனத் தேறினவராய், புலை விலைஞனாய் வந்தவன் காலில் விழுந் தெழுந்து, "ஐயா! நீர் யார்? அநீதியான வல்வழக்குப் பேசி என்மேற் பழி சுமத்துவானேன்? நேற்றும் இம்மாதிரி ஒருவர், என்னை மது வருந்தினதாகத் தொடர்ந்தார். இன்று நீவிர் மாமிசம் வாங்கினதாகத் தொடர்கிறீரே!" என்றார். "ஆ! ஆ!! என்னைத் தெரிகிலீரோ? இது யாருடைய இராச்சியம்? என்னுடைய இராச்சியமல்லவா? என்னுடைய ஆஞ்ஞையின் வழிநடக்காமல், நீ கருப்பஞ் சோலையில் ஆளில்லாப்போது கரும்பைத் தின்று சும்மா போகாமல் காசு வைத்துப் போனதற்காகவே நான் உன்னைப் பிடித்தாட்ட வந்தேன். நான்தான் கலிபுருடன்" என்றார்.

உண்மையையும் கலிபுருடன் வலியையும் பிராமணர் உணர்ந்துகொண்டார். ஆயினும், நிலைபிறழா தொழுகினர். கலிபுருடன் வலி யிவ்வாறான நிலை யென வுணர்ந்து, அறிஞர்கள் கலியின் கொடுமைக்கு அஞ்சுவதில்லை.

"சலங்காணும் வேந்தர் தமக்குமஞ் சாரெமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவி தான்கற் றறிந்தவரே."

## இதிலென்ன தப்பு?

'தீண்டப்படாதாரும் இந்துக்கள், உயர்சாதியினரும் இந்துக்கள், ஆலயமும் இந்து. ஆகையால் தீண்டப்படாதாரும் ஆலயத்தில் ஏன் பிரவேசிக்கக்கூடாது' என்று ஒரு சில நவீனர் வாதுபேசித் தீண்டப்படாதாரின் கோவில்நுழைவை ஆதரிக்கின்றனர். சநாதனிகள் அந்நுழைவைத் தடுக்கும் பொருட்டு அவரைப் பின் வருமாறு மாறிவினவுகின்றார்கள்.

1. இந்துக்களும் ஆஸ்திகர். மகமதியரும் ஆஸ்திகர். ஆலயமும் ஆஸ்திகம். ஆகையால், மகமதியரும் ஆலயத்தில் ஏன் பிரவேசிக்கலாகாது?

2. ஆஸ்திகரும் மனிதர். நாஸ்திகரும் மனிதர். ஆலயமும் மனித நிலயம். ஆகையால், நாஸ்திகரும் ஆலயத்தில் ஏன்பிரவேசிக்கலாகாது?

3. மனிதரும் உயிர்வருக்கம்; மிருகமும் உயிர் வருக்கம். ஆலயமும் உயிர் வருக்க நிலயம். ஆகையால், மிருகமும் ஆலயத்தில் ஏன் பிரவேசிக்கலாகாது?

மே. சுப்புராமி.

உ

# மணிமேகலை.

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

(முற்றொடர்ச்சி: திங்கள்-அ, பக்கம்-312.)

சுடலையிற் பேயைக்கண் டஞ்சி உயிர் துறந்த சாரங்கலன துயிரைத் தன்னுயிரைக் கொண்டாயினுந் தரவேண்டிய கோதமைக்கு, விதியை வெல்லத் தெய்வத்தானு மாகாதெனச் சம்பாதி கூறிய,

"ஐய முண்டோ வாருயிர் போனாற்
செய்வினை மருங்கிற் சென்றுபிறப் பெய்துத
லாங்கது கொணர்ந்துநின் னாரிடர் நீக்குத
லீங்கெனக் காவதொன் றின்று"

என்பது, 'விதியின் பயனே பயன்' என்னும் ஔவையார் கருத்தைக் கொண்டுளது.

மணிமேகலாதெய்வம், மணிமேகலையை மணிபல்லவத்து வைத்துத் திரும்பி உதயகுமரனிடம் வந்து, "அரசன் நீதிதவறாச் செங்கோலினனாக இருக்கவேண்டும். நீதி தவறுவானாயின், கோள்கள் நிலைதிரியும். கோள்கள் நின்றநிலையில் வேறுபடுமாயின், மழைவளம் நீங்கும். மழைவளம் நீங்கில் உயிர்களுக்குத் துன்ப முண்டாகும். "விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே, பசும்புற் றலைகாண் பரிது" அன்றோ? உயிர்களுக்குத் துன்பமுண்டாயின், அவைகள் அரசனுயிரென்னுந் தகுதி நீங்கும். ஆதலின், தவத்திறம் பூண்டோடன்மேல் வைத்த ஆசையாகிய நீதி தவறும் நெறியினை விடுப்பாய்" என நீதிகூறு மடிகள் மிக அழகா யமைந்துள்ளன. அவையாவன:—

"மன்னவன் மகனே,
கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடில் மாரிவறங் கூரு
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின் றாகுந்
தவத்திறம் பூண்டோ டன்மேல் வைத்த
வவத்திற மொழிக"

என்பதாம். இதில், அரசன் செங்கோனிலை தவறின், உயிர்களுக்குத் துன்ப முண்டாகுமென்பதனை நன்கு விளக்கியிருக்கின்றார்.

சக்கரவாளக்கோட்டத் துலகவறவியிலிருந்த சுதமதிக்கு, ஆங்குள்ள தூணிற் செய்யப்பெற்றிருக்கும் பாவை முன்சன்மத்தி லுன்னுடைய தங்கையாகிய மணிமேகலை, தன் பிறப்பையும் நின் பிறப்பையு மறிந்துகொண்டு, இற்றைக் கேழாநாட் காலையி லிவண் வருவள் எனக் கூறியது, விக்

கிரகத்திற் றெய்வமில்லை யெனக் கூறும் பேதையர்க்கு வாய்ப்பூட்டாக அமைந்துளது.

மணிமேகலை மணிபல்லவத்திற் கெடுத்துச் செல்லப்பெற்றதை, சுதமதியாற் கேட்ட மாதவி, வேறொன்றிலும் மனம் வையாது வருந்தி யவளையே நினைத்துக்கொண்டு, உயிரிழந்தவள்போ லானாளென்பதனைக் குறிப்பாக,

"நன்மணி யிழந்த நாகம் போன்றவள்
தன்மகள் வாராத் தனித்துய ருழப்ப"

எனக் கூறுகின்றார். மணி யிழந்த நாகமெனில் இழக்கப்பெற்ற மணி நாகரத்தினமா? அன்று! அன்று! ஜீவரத்தின மென்பதனைக் குறிக்கவே நன்மணியென்றார். ஜீவரத்தின மிழந்த நாக மெவ்வாறு உயிர்வாழும்?

மணிபல்லவத்துற்ற மணிமேகலை காலையிலெழுந்து கவனிக்குங்கால், அது வேறோரிடமாகத் தோன்ற, அதனை உவவனத்தி லோர் பகுதியே போலுமென நினைத்துச் சுதமதியைக் காணாது,

"விஞ்சையிற் றோன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சஞ் செய்தனள் கொல்லோ வறியேன்"

வித்தியாதரனிடம் சிலகால மிருந்தனள். ஆதலின், ஏதேனும் வித்தை கற்றிருப்பாள். இதனை நினையாது இவளுடன் வந்தேனே! தனிமைக் கஞ்சுகின்றேனென ஒருவாறு சமாதான நினைப்பது எவ்வளவு அழகாயிருக்கின்றது!

மணிபல்லவத்துத் தரும பீடிகையைக் கண்ட மணிமேகலை, தன்னையே யறியாதவ ளானாள். அவளது கைகள் தலையின்மேற் கூப்புதலைச் செய்தன. கண்கள் முத்துப்போன்ற தண்ணீரை முலையின்மே லுதிர்த்தன. கால்கள் மூன்று முறை வலம்வந்தன வென்னுங்கருத்துக்கொண்ட,

"ஆங்கது கண்ட வாயிழை யறியாள்
காந்தளஞ் செங்கை தலைமேற் குவிந்தன
தலைமேற் குவிந்த கையள் செங்கண்
முலைமேற் கலுழ்ந்தமுத் தத்திர ளுகுத்ததி
னிடமுறை மும்முறை வலமுறை வாரா"

என்ற இவ் வடிகள், மணிமேகலையின் தெய்வபக்தியை நன்கு விளக்குகின்றன.

மணிமேகலை, மணிமேகலா தெய்வத்தினிடத்து முன் பிறப்பிற் றன் கணவனாகவிருந்த இராகுலன் எங்குளான் எனக் கேட்க, அவ் வரலாற்றை மணிமேகலாதெய்வங் கூறுங்கால், சென்ற பிறப்பில் நின் கணவனாகிய இராகுலனோடு பூஞ்சோலையில் நீ யூடியிருக்க, அதுபோழ்து அம் மார்க்கமாக வரும் சாதுசக்கரனென்னு முனிவனை நீ வணங்க, அதனாற் கோபமுற்ற இராகுலன் வந்தவன் யாரென வினவ, நீ அவன் வாயைப் பொத்திப் பெரியாரை வணங்கவேண்டுமென்னும் நீதியை,

"வானூ டிழிந்தோன் மலரடி வணங்காது
நாநல் கூர்ந்தனை"



எனப் பெரியோரை வணங்காவிடிற் குற்றமுண்டாகு மென்பதாலும், புண்ணியஞ் செய்தார்க்குப் பிறப்பு நீங்கும் என்பதை, அம் முனிவனுக்கு அந்தித் தண்ணீரமுதொடு கொடுக்க,

"அந்நா ளவனுண் டருளிய வவ்வறம்
நின்னுங் கொழியாது நிற்பிறப் பறுத்திடும்"

என்பதாலும் அறியலாம்.

அமுதசுரபி பெற்ற மணிமேகலையினிடத்துத் தீவதிலகை கூறுவதாக,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்"

எனப் பசியுடையா னொருவன் றிறத்தை மிக அழகாகக் கூறுகின்றார். உயர்குடிப்பிறந்த ஒருவனே, அன்னமின்றி யிறக்குந் தருவாயி லிருப்பானேயானால், பசியால் மெலிந்த அக்காலத்து மிகத் தாழ்குடியிற் பிறந்த ஒருவன் அன்னங் கொடுப்பானாயினும், அதனை வாங்கியுண்ண நினைப்பானேயன்றி அவ்விடத் துயர்குடி தாழ்குடி வேற்றுமை நினைக்கமாட்டான். ஆகலின், பசி குடிப்பிறப் பழிக்குந் தன்மையுடையது. சிறப்புடையனாயிருப்பானாயின், அச் சிறப்பை நீக்கி எங்கேனுஞ் சென்று யாசிக்கச்செய்யும். கடலில் விழுந்தார்க்குத் தெப்பம்போன்ற கல்வியை நீக்கும். "ஏற்ப திகழ்ச்சி" "ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற், கிரவி னிளிவந்த தில்" என்று படித்திருந்தும், பசித் துன்பம் வருமாயின், "கற்க கசடறக் கற்பவை கற்றபி, னிற்க வதற்குத் தக" என்பதனை மறந்து இரக்கச் செய்யும். நாணாகிய ஆபரணத்தை நீக்கும். எவ்வளவு அழகுமிகுந்த சரீரத்தை யுடையானும் பசிப்பிணியை யடைவானாயின், அதனால் மெலிந்து அழகு நீங்கப் பெறுவா னென்பதில் ஐயமுண்டோ? இதனாலன்றோ,

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்"

என்றனர் ஔவையார்.

இவ்வாறு யாவரையும் வாட்டுகின்ற இப் பசியைநீக்கி உணவுகொடுத்தவர்கள், அப் பசிவருத்தத்தா லுயிர்நீங்காது அவ்வுயிரையே கொடுத்தவர்களாவார்க ளென்பதாக,

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே"

எனப் பின்னும் அன்னதானத்தின் பெருமையை நன்கு விளக்குகின்றார்.

ஆபுத்திரன் யாகபலிக்காகக் கொண்டுவந்து கட்டியிருந்த பசுவை, "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன், உயிர்செகுத் துண்ணாமை நன்று" என்னும் நீதியைக் கடைப்பிடித்தவனும், தாயாற்காட்டிலிடப்பட்டதனக்குப் பசுவே பாலூட்டிவளர்த்ததனால் அதன்பால் விருப்புடையவனும், அந்தணர்கள் கொல்லாதவாறு இரவிற்பிடித்துச் சென்றமை,

ஜீவகாருண்ணியத்திற் சிறந்தது பிறிதொன்றில்லை யென்பதைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றது. நம் நாட்டவர், பசுவின் உடலில் அநேக கோடி தேவர்கள் வசித்துவருவதாகவும், அதனைக் கொல்லுதல் மிக மிகப் பாவமான செய்கையென்றுங் கூறுகின்றனர். தேவர்கள் வசிப்பதை நாம் கண்கூடாகக் காணமுடியவில்லையாதலின், பசுவைக் கவர்ந்த ஆபுத்திரன் அந்தணர்களை நோக்கி,

"விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பா
லறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டு
மிதனொடு வந்த செற்ற மென்னை
முதுமறை யந்தணிர் முன்னிய துரைமோ"

பசுக்கள் மேய்வதற்காக அரசனால் விடப்பட்ட பூமியில் உள்ள புல்லை மேய்ந்து, இவ் வுலகத்துள்ள மனிதர்களுக்கெல்லாம் சிறந்ததாகிய தன்னுடைய பாலைத் தருகின்ற இப் பசுவினிடத்து உங்களுக்கு வந்த கோபமென்னை? எனக் கேட்கின்றனன். தனக் குபகாரஞ் செய்தா னொருவனுக்கும் பதிலபகாரஞ் செய்தல் பாவமென நூல்கள் கூறுகின்றன. அப்படியிருக்க, உபகாரஞ் செய்தார்க்கு—செய்கின்றார்க்கு—செய்வார்க்கு, அபகாரஞ் செய்தல் எவ்வளவு பேதைமையுடைத்து! பசுவினு லுலகத்துள்ள மக்கட் குபகாரமேயன்றி அபகாரமின்று. ஆகலின், அதனைக்கொல்லுதல் முறையன்றெனக் குறிப்பாகக் கூறுகின்றார்.

நாகர்மலை யடைந்த சாதுவனை நாகர்கள் தங்கள் தலைவனிடம் கூட்டிச் செல்ல, சாதுவனைப் பார்த்த நாகர் தலைவன், கள்ளையு மூனையு நிறையக்கொடுத்து ஓர் இளையாளையு மனுப்புங்களென நாகர்களுக்குக் கட்டளையிட, சாதுவன் அவைகளெல்லாம் வேண்டாமெனக் கூற,

"பெண்டிரு முண்டியு மின்றெனின் மாக்கட்
குண்டோ ஞாலத் துறுபயன்" எனக்கேட்ட,
"கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையி
லெண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த"

நாகர் தலைவனையும், மறுபிறப்பு, புண்ணியபாவம், புண்ணியஞ் செய்தார் நல்லுல கடைதல், பாவஞ்செய்தார் நரகடைதல் முதலியவற்றை விளக்கி நல்வழியிற் றிருப்பியதாகக் கூறும் அடிகள், மிகப் போற்றற் குரியவாகும். பெரியோர்ப் பிழைத்தலால் வரும் தீமை பல வென்பதைக் காயசண்டிகையினது சரிதத்தா லறியலாம்.

மணிமேகலையினிடத்து அளவில்லாக் காதல்கொண்ட உதயகுமரன்பால் சித்திராபதி சொல்லும்,

"கன்னிக் காவலுங் கடியிற் காவலுந்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலும்
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோ னல்லது தெய்வம் பேணாப்
பெண்டிர்தங் குடியிற் பிறந்தா ளல்லள்



நாடவர் காண நல்லரங் கேறி
யாடலும் பாடலு மழகுங் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவி லருப்புக்கணை தூவச்
செருக்கய னெடுங்கட் சுருக்குவலைப் படுத்து
கண்டோர் நெஞ்சங் கொண்டகம் புக்குப்
பண்டேர் மொழியிற் பயன்பல வாங்கி
வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை"

என்ற இவ் வடிகளிற் குலமாதர் பொதுமாதரின் ஒழுக்கங்களைச் செவ்விய முறையில் தெரிவிக்கின்றார். குலமாது எப்போதுங் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டியவளாதலின், "கன்னிக் காவலுங் கடியிற் காவலுந், தன்னுறு கணவன் சாவுறிற் காவலும்" எனக் கூறினார். பிறர் காக்குங் காவல் பயன்படா தென்பதனைக் குறிக்கவே நிறையிற் காத்து என்றும் கூறினார். "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" யென்பது தேவர் திருவாக்கன்றோ? அந்நிய புருடனை மனத்தினும் நினையாது, கொண்ட கணவனன்றி வேறு தெய்வமு மில்லை யெனக் கணவனையே பேணும் மாதே குலமாதுக் குரிய ஒழுக்கமுடையவளாவாளென்பதனை, "பிறர்க்காணாது, கொண்டோ னல்லது தெய்வம் பேணாப், பெண்டிர்" எனக் கூறினார். இனிப் பொது மாதர்கள், உலகோர் பார்க்க நடனமேடைமீதேறி, ஆடல் பாடல் அழகு முதலியன காட்டி, வரும் ஆடவர்களை மன்மத பாணம்படக் கண்ணாகிய சுருக்கு வலையி னுட்படுத்தி, அவர்களிடமிருந்து வேண்டிய பொருள்களையெல்லாம் பெற்றுப் பின் அவர்கள் தேன் சிறிது மில்லாத பூவைப்போலப் பொருள் சிறிதேனு மில்லாதவர்களாக ஆனவுடன், அவர்களைத் துரத்திவிடுவார்களென்னுங் கருத்தைப் பின்னேழடிகளாலுங் கூறுகின்றார்.

உயர்ந்த கற்புடையா ளொருத்தியை யொருவன் காதலுற் றெண்ணுவானாயின், அப் பெண்ணினது கற்பாகிய தீ அவன் உள்ளத்தைச் சுட்டுவிடு மென்பதனை,

"மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகார்"

எனக் கூறுகின்றார்.

கச்சிமாநகர் சென்ற மணிமேகலை, தன் அமுதசுரபியினா லுயிர்களுக் கன்னமிடுவதை,

"மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
காணார் கேளார் கான்முட மானோர்
பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்
மடிநல் கூர்ந்த மக்கள் யாவரும்
பன்னூ றாயிரம் விலங்கின் றொகுதியும்
மன்னுயி ரடங்கலும்"

எனப் பிச்சையளிப்பதன் நெறியை நன்கு விளக்குகின்றார். இன்னும், இவைபோன்ற நயம் பல மணிமேகலையில் வாய்ந்து, புலவர்க் கமுதெனப் பொங்கிவழிகின்றது. எனினும் விரிவஞ்சி இம்மட்டுடன் முடிக்கின்றேன்.

---

உ

# திருக்குறள்—கடவுள் வாழ்த்து.

(ஆசிரியர் திரு. பா. ரா. பரமசிவமுதலியார், சங்கரன்கோவில்.)

தற்காலம் ஆராய்ச்சியாளர் என்பார் சிலர் அடிப்பட்ட ஆன்றோர் நூலைப்படித்துணரும் மதியும் முயற்சியுமின்றித் தமது வெள்ளறிவைக்கொண்டு பண்டைய நூல்களைச் சீர்தூக்க முனைந்து குற்றம் காட்டுகின்றனர். அத்தகையோரொருவரால் திருவள்ளுவர்மேலும் குற்றம் சாற்றப்பட்டது கண்டு அடியேற்கு அங்கம்பதைத்தது. எனினும், அதன்ஆசிரியர் உண்மைகாண வேட்கையுடையரோ என்று சமாதானமாக ஓர்கட்டுரை எழுதிவிடுத்தேன். 'முதலையும் மூர்க்கனும் கொண்டதுவிடா' என்ற முதுமொழியை அவர் நிரூபித்தனர்.

ஆன்றோர் எக்காரியம் செய்யத் தொடங்கினும் இறைவணக்கம் செய்யும் முறையே திருவள்ளுவர் கடவுளை வாழ்த்துகிறார்.

தேவர், 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தில் இறைவனை மெய்ப்பொருள் செம்பொருள் என்று கூறும்பெற்றியர் ஆதலால், கடவுள்வாழ்த்தில் அவரை ஆணாகமட்டும் குறித்திரார். ஆணாகமட்டும் குறிக்கும் கடவுள்வாழ்த்துப்பாக்கள் பத்தும் அவருடையன அல்ல என்றும், அவருடைய பாக்களே என்று நிலைநாட்டின், வள்ளுவர் ஆண் பெண் சமத்துவ நோக்குடையர் அல்லர்; சமநோக்குடையராயின் ஒன்றிரண்டு பாக்களிலாவது பெண்பாலிலும், ஒன்றன்பாலிலும் கூறியிருப்பர் என்றும் மொழிவர். திருவள்ளுவர் உலகுக்கு ஓர் நூல்வழங்கிச் சிறந்த நீதிகளைப்புகட்டினர் என்பது வெள்ளிடை மலையே. சாமானியர்க்குப் பொதுமையாகவும், சான்றோர்க்குச் சிறப்பாகவும் நூல்செய்யப்புகுந்த நம்தேவர்க்கு இறைவனது இருப்பு, இருப்புணர்ந்த நல்லோர் செய்யவேண்டிய கடமை, அக்கடமைசெய்யும்வழி, கடமை செலுத்தியபின் பெறும்பயன் இவற்றை விளக்கவேண்டுவது கடமை. மக்கள் அறிவு இருவேறு நிலையில் நின்று வேலைசெய்யும் இயல்பினது; அதாவது எதாம் ஒரு பொருளைக் கண்டால் தான்வேறு, அப்பொருள் வேறுஎன்றுகருதி அப்பொருளின் தன்மைகளைத் தெரிந்துணரும் ஆற்றலும், அவ்வாறு பொருளினது தன்மை தெரிந்து அத்தன்மைகள் தமக்கு இன்பம்தருவன என்றுகண்டால் உள்ளமும் அறிவும் அப்பொருளின் தன்மைகளில்--குணங்களில்--செய்கைகளில் ஒன்றி வேறுபடாது நிலைக்கும் இயல்புங் வாய்ந்தது. அறிவு இத்தன்மைத்து என்பதைக் கருத்தில் ஊன்றிச் சிந்தித்துத் தெளிக. முந்தியதன்மை அதாவது பொருள்களை அறியும் ஆற்றல் 'அறிவுடைமை' என்றும், பிந்திய தன்மை அதாவது அப்பொருளின் தன்மையில் ஒன்றுபடுதல் 'மெய்யுணர்வு' என்றும் ஆசிரியரால் உணர்த்தப்படுகின்றன. இதனை 'நூலறிவாம் வேதாந்தஞானம்' என்றும், அழுந்தியறிதலாம் சித்தாந்த உணர்வு என்றும் கூறுவர். மாணாக்கர் வேறுநின்று பொருள்களை அறிந்தபின்னரே ஒன்றியுணரும் ஆற்றல்பெற்று அழுந்தியறிவர் என்பது உணர்ந்த ஆசிரியர், முதற்கண் கடவுளைப்பற்றிக் கூறுமிடத்துத் தான்எனும் தனியுணர்வுடன் வே



றுநின்று ஆராயும் வழியிலே அறிவுறுத்துகின்றார். ஒருபொருளை வேறுநின்று ஆராயும்போது அப்பொருளினது தன்மை அதனது செய்கையால் தான் உணரப்படும். பொருளில் செயல்தோன்றும்போது அதனிடம் ஆற்றல் அல்லது வல்லமை இருப்பதைத் தெரிகிறோம். பொருளினது ஆண்மை உணர்ந்தாலன்றி அதன்செய்கை---அதன்பயன் உணரமுடியாது. ஆதலின் நம்பெருந்தகை வேறுநின்று ஆராயலுறும் மாணவனுக்கு கடவுளது ஆண்மையை விளக்குவான் ஆண்பாலிற் கூறினார். இனி கடவுள்வாழ்த்து இருவகைப்படும் என்றும், அவை ஏற்புடைக் கடவுள்வாழ்த்து, வழிபடுகடவுள் வாழ்த்து என்றும்கூறி, வள்ளுவர் வாழ்த்து அவ்விரண்டிற்கும் பொது என்பர் சிலர். ஆதலின் இவ்வாழ்த்துச் சாமானியர்க்கு ஏற்புடைக் கடவுள் வாழ்த்தாமாறு, அடிப்பட்ட சான்றோர்க்கு வழிபடு கடவுள்வாழ்த்து ஆகும் என்பதே அறிவாளர் முடிபாகும்.

இதனை முதற்குறளால் நிறுவுவதன் முன்னர் ஏற்புடைக்கடவுள் வாழ்த்துக்கும் வழிபடு கடவுள்வாழ்த்துக்குமுள்ள தொடர்பை விளக்குவாம். 'ஏற்புடைக்கடவுள் வாழ்த்து' என்பது கவி தான் வணங்கிவருகிற கடவுள் எதுவானாலும், எடுத்துக்கொண்ட நூலுக்கேற்ப அந்நூலால் புகழப்படும் கடவுளை (கந்தப்புராணத்திற்கு முருகனையும், ராமாயணத்திற்கு ராமனையும் வாழ்த்துதல் போல) வாழ்த்துதல். வழிபடுகடவுள் வாழ்த்தாவது கவி எந்நூலை இயற்றிய போதிலும், தான் நம்பி வழக்கமாக வழிபட்டுவரும் கடவுளையே வாழ்த்துதல். (சைவர்கள் சிவபெருமானையும், வைணவர் திருமாலையும், விவிலியநூலார் ஏசுநாதரையும், முகமதியர் நபிநாயகத்தையும் வாழ்த்துதல் போலாம்.). கவி ஒருநூலைச் செய்யவேண்டுமென நினைப்பது தமதுள்ளத்தில் உதித்து நிலறந்து வளர்ந்துவரும் உண்மைகளை உலகத்தார்க்குணர்த்தி அவர்களைச் செம்மைப்படுத்துவதற்கு--அவரை இன்புறச் செய்வதற்கு எண்ணும் போதாவது, தம்மால் அன்புசெய்யப்பட்ட பெரியார் விருப்பப்படி அவரால் குறிக்கப்பட்ட செய்தியைவெளியிடநினைக்கும் போதாவது என்பது உணரற்பாலது. இங்கு தமதுளத்துதித்த உண்மை வெளிப்படும்போது வரும் கடவுள்வாழ்த்து தமதுளத்து கடவுள்வாழ்த்தாகவே வெளிப்படும் என்பதும், பிறர் வேண்டுகோளின்படி நூலியற்ற முற்பட்ட ஒருவரிடம்தான் ஏற்புடைக்கடவுள் வாழ்த்து வெளிவரவழியுண்டு என்பதும் அறிவுடையார் ஒப்ப முடிந்தது.

போறிஞர் நூலியற்றப் புகுங்கால் உலகர் அறிவுநிலை கண்டு அதாவது தமது கருத்தை உணரவன்மையற்ற தன்மைகண்டு—எளிய நூல்செய்யும் பொழுது அந்நூலுக்கேற்ப வாழ்த்துக்கூறுவரோ எனின் கூறுதலும் உண்டு. ஆனாலும் அவ்வகையில் ஏற்புடைக்கடவுள் வாழ்த்துக் கூறியபோதும் கவி தனதுள்ளத்துறை கடவுளை (விதந்து கூறாவிடினும்) உய்த்துணரக் கூறலேமரபு என்பதும் ஆசிரியர்ஒழுக்கம் அதுவே என்பதும் அறியற்பாலன. திருவள்ளுவர் பிறர் வேண்டுகோளுக்காக இந்நூல் செய்யமுற்பட்டார் என்று எவரும் கூற முற்படார். ஏனெனில், அவர்கூறும் செய்திகள்எல்லாம் ஆழ்ந்தமைந்து அநுபவித்துக்கண்ட உண்மையாகக் காணப்படுகின்றமையின், அப் பெரியார் தமதுள்ளத்துதித்தவற்றை அருளால் வெளிப்படுத்தினார் என்பதேவெள்ளிடைமலை. ஆசிரியர் தாழ்ந்தஅறிவுடையார்க்கும் பயன்

பட நூல் செய்தாரெனக் கொண்டு யாவர்க்கும் பொதுப்படக் கூறினார் என்றல் அமையாது. இன்னும் யாவர்க்கும் எச்சமயத்தார்க்கும் பொதுப்படக் கூறினார் என்று கொள்ளும்போது அவரது நூலைப்படிக்கும் மாணவர் பலசமயக் கோட்பாடுகளின் பொதுமைகண்டிருந்தாலன்றி அந்நூலின் நுட்பம் உணரமுடியாதவராவர். இன்னும் நுண்ணறிவுடையார்க்கு பயனின்றிக்கழியும் அவரது நூல் என்று தள்ளப்படும். ஆதலின் சாமானிய அறிவாளர்க்கும் நுட்பம் விளங்காவிடினும் பொதுப்பொருள் விளங்கி இன்பம் தரும்படியும் மதிநுட்பம் பெற்றோர்க்கு மாண் பொருள்தரும் சிறப்பு நூலாகவும் திருக்குறளை வள்ளுவர் இயற்றினார் என்றல் பொருத்தமாகும்.

ஆகவே, சாமானியர்க்குப் பொதுமையாகவும், மதிநுட்ப நூலோடுடையார்க்குச் சிறப்பாகவும் நூல் செய்யப்புகுந்த ஆசிரியர் தமதுஉள்ளத்துதித்த செந்நெறிகளைக் கூறும்போது தாம்வழிபட்டுவந்த கடவுளையே சாமானியர்க்குப் பொதுமையாகவும் (ஏற்புடைக்கடவுளாகவும்)—அடிப்பட்ட சான்றோர்க்குச் சிறப்பாகவும் (வழிபடு கடவுளாகவும்) தோன்றக் கூறினார்.

“அகர முதலஎழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு”

என்பது முதற்குறட்பா. இதற்குப் பரிமேலழகர் “அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம். அதுபோல ஆதிபகவனாகிய முதலையுடைத் துலகு” எனஉரைவரைகின்றார். இதில் ஆதி என்றஅடைமொழியின் சிறப்பு எடுத்துக் காட்டப்படவில்லை. ஆதிபகவன் என்ற தொடர்மொழி, ஆதியாகிய பகவன்என இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகையாகவாவது, ஆதியில் உள்ளபகவன்என ஏழாம் வேற்றுமைத் தொகையாகவாவது, ஆதியைஉடைய பகவன்என இண்டாம் வேற்றுமைத் தொகையாகவாவது விரியும்.

இருபெயர் ஒட்டுத் தொகையாயின் முதலிலுள்ள ஆதி என்னும் சொல் சிறப்புப் பெயராக வழங்கும் கடவுள் ஒருவர் வேண்டும். அவ்வாறு காணப்படாமையின் அதுபொருந்தாது. ஏழாம் வேற்றுமையில் பொருள் கொண்டால் அந்தத்தில் உள்ள பகவன் ஒருவன் ஏற்பட்டு முழுமுதற்கடவுளின் தன்மைகெடும். ஆகவே இரண்டாம் வேற்றுமையில் ஆதிஎன்பது அவனது அருள் அல்லது சக்தியைஉணர்த்தலால் ஏனைச்சமயத்தார் கொள்ளும் பகவர்களிலிருந்து பிரித்து தமது வழிபடு கடவுளைக்குறிப்பதற்கு வழங்கிய அடைஎன்பதுதானே போதரும். அவ்வாறின்றி வெறும் அடையாக் கொள்ளல் சாலாது. சைவசமயத்தார் தமது இறைவனது சக்தியாம் அம்மையாரை ஆதி என்னும் ஒலியால் குறிப்பிடுவதை உலகம் அறியும். ஆகவே எம்வள்ளுவர் வழிபடுகடவுள் சைவசமயத்தார் கொண்டுள்ள தனி முதற் பொருளே என்பது உணரற்பாலது.

இதனை ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள்,

“சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வநீ யென்றேப்பாற்
சோர்விலடை யாற்றெளிந்தோம் சோமேசா!—ஓரில்



அகர முதலஎழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு

எனத் திருவாய் மலர்ந்து தெளிவுறுத்தி யிருக்கிறார்கள்.

அன்புடையீர்!

முதலில், கடவுளை ஆண்பாலிற்கூறி இறைவனது ஆற்றலை உணர்த்துகின்றார் ஆசிரியர் என்றும், அதனால் வள்ளுவரது பெண் ஆண் சமத்துவ நோக்குக் கெடுமாறில்லை என்றும் சிறிது உணர்த்தப்பட்டது. ஆசிரியர் இக்குறளில் இறைவரது பேணும் தன்மையாம் பெண்மை—தாய்மை உணர்ந்தால் அன்றி அவனை ஆண்மையிலும் அறியமுடியாது என்பதனை விளக்கும் பொருட்டு அவனது அருள்வடிவாம் அன்னையை முதலிற் குறிக்கின்றார். ஆதி என்பது ஆதலைச்செய்யும் இறைவன்சக்தி; ஆதலைச் செய்வது—உயிர்கள் இன்பம்பெறும் பொருட்டு ஆகவேண்டியவற்றை முன்னர் ஆக்குவது—ஆதி. இதனை “அந்தம் ஆதி என்மனார் புலவர்” என்ற விடத்தும் கண்டுதெளிக.

ஒரு பொருள் தனக்குப் பயன்படும் தன்மை—தன்னைப்பேணும் தன்மை—தன்னை இன்புறுத்தும் தன்மைஉணர்ந்தால் அன்றி, அதன்வல்லமை ஆண்மை செயல் அறிய அவா உதியாது என்பது எவர்க்கும் உடன்பாடாகும். இவ்வாறு பயன்படும் முறை தெரிந்து அப்பொருளின் தன்மை கண்டால்தான், அப்பொருளின் தன்மை செயல்களைத் தானும் அடைய வேண்டும் என்ற அவா உதித்தல் இயல்பு. இதனை உணர்த்துவான் உயிர்களுக்கு நன்மை செய்கின்ற இறைவனது அருட்சக்தியை உணர்த்தும் ஆதியை முதலில் கூறி, பகவனைப் பின்னர் சுட்டினார். நிட்டைகூடு முறையில், தாயுடன் சென்று தாதையைக்கூடித் தாயைமறக்கப் பணித்தமையோடு சேர்த்துப் பார்த்துத்தெளிக.

இனி, பகவன் என்ற சொல்லின் பொருளையும் ஆராய்ந்து தெளிவாம். இச்சொல் வடமொழி என்று கொண்டார் சிலர். அத்தகைய புலவர் ‘செந்தமிழ்நாட்டில் வாழ்ந்தபெரியார்—ஓர் தனிப்புலவர்—உலகத்திற்குப் பொதுவாகவும் தமிழ்நாட்டார்க்குச் சிறப்பாகவும் பயன்படக்கூடிய ஓர் சிறந்தநூலைச்செய்யத் தொடங்கும்போது முதற்குறளிலேயே பிறமொழிக் கலப்பு இன்றித் தமது கருத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் இலராயினர் என்றால் ஏற்குமா என்று சிந்திக்க வேண்டுகிறேன். இன்னும், கடவுளைக் குறிக்க—தமது வழிபடுகடவுளைக்குறிக்க—தமது தாய்மொழியில் ஒரு சொல்லைக் கொள்ளாமல் பிறமொழி எடுத்தாண்டார் என்றால் அன்னவர் புலமையும், மாணாக்கருக்கு அறிவுறுத்தும் பெற்றிமையும் ஒப்பத்தகுந்தனவோ? ஆகையால் தெய்வப்புலமை மிக்க நம் தேவர்மாட்டு அத்தகைய இழிவு பொருந்தாது என்பதே சால்பாம்.

யாதாம் ஓர் நூலுக்கு உரைவகுக்கப் புகுந்தால் அதிலுள்ள சொற்களுக்கு அந்நூல் தோன்றிய நாட்டுமொழிக்குப் பொருந்தப் பொருள்கொள்ள முடியாமற்போனால் அந்நாட்டில்வந்து பழகிய ஏனைமொழியின் போக்கில் பொருள்கொள்ளல் ஆகுமேஒழிய எளிமைநோக்கி எல்லாச்சொல்லையும்பிறமொழியிற் பொருள்கொள்ளல் ஆகாதுஎன்பது அறிவாளர்க்குஉடன்பாடா

கும். ஆதலின் பகவன் என்ற சொல் தனித்தமிழ் நிலவியகாலத்தில் வாழ்ந்த வள்ளுவப்பெருந்தகையாரால் ஆளப்பட்டமையால் அதற்குத் தனித்தமிழ்ப்பொருளே கொள்ளற்பாலது என்பர் மேலோர். இது பகவு என்ற பகுதி அல்லது முதனிலையிலிருந்து தோன்றிய ஆண்பாற்பெயர். பகவு என்றசொல் பாகம், பங்கு, பிரிவு எனப்பொருள்படுதலை 'எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும், உட்பகை யுள்ளதாம் கேடு' என்ற குறட்பாவினால் தேர்க. ஆதலின் பகவன் என்ற தனித்தமிழ்ச்சொல் பங்குடையோன். பிரிவுடையோன் பாகமுடையோன் எனப் பொருள்படும். இதனால் ஆதிபகவன் என்றசொற்றொடர் உயிர்களுக்கு ஆதலை (மேன்மையை)ச் செய்யும் அருட்சக்தியைத் தனது பங்கில் உடையவன் என்று பொருள்பட்டு மங்கை பங்காளன் என்றபொருளையே தந்திடும் என்பதைக் கூர்த்தமதி கொண்டு தெளிக. இவ்வாராய்ச்சியால் வள்ளுவரது சமத்துவநோக்கும், பொதுவாகவும் சிறப்பாகவும் பலதர மாணவர்க்கும் அறிவுறுத்தும் பண்பும் வெளிப்பட்டன.

---

# ஜீவபாலனும் செட்டியாரும்.

ஜீவபாலன்: ஐயா செட்டியாரே! ஆட்டை வலிய வலிய எங்கே இழுத்துக்கொண்டு போகின்றீர்?

செட்டியார். பெரியபாளையத்தம்மனுக்குப் பிரார்த்தனைசெலுத்த ஓட்டிக்கொண்டு போகின்றோம்.

ஜீவ. எதற்காகப் பிரார்த்தனை?

செட்டி. என் மனைவி ஜ்வரத்தால் அவஸ்தைப்பட்டு படுக்கையாய்க் கிடந்தாள். அப்பொழுது அம்மனுக்கு உயிர்க்குயிர் கொடுப்பதாகப் பிரார்த்தனை செய்து கொண்டோம்.

ஜீவ. வெகு பேஷ்! அம்மாதிரிப் பிரார்த்தித்துக் கொண்டதால் தான் உங்கள் மனைவியார் பிழைத் தெழுந்தார்களோ?

செட்டி. ஆமாம்! அம்மன் உயிர்க்குயிர் கொடுத்தாள்.

ஜீவ. வைத்தியம் பார்த்தீர்களா?

செட்டி. ஆம்! டாக்டர் ரங்காச்சாரியார்தான் பார்த்தார்.

ஜீவ. (சிரித்துக்கொண்டே) டாக்டரின் மருந்தால்தான்நீங்கியிருக்கப்படாதா?

செட்டி. தெய்வத்தை விட டாக்டர் சக்தியுடையவரா?

ஜீவ. ஐயா செட்டியாரே! நமக்கு ஆண்டவன் ஆறும் அறிவாகிய பகுத்தறிவைக்கொடுத்திருக்கின்றான். அவ்வறிவைச்சற்றுஉப



யோகப்படுத்திப் பாருங்கள். மருந்தினால் நோய் நீங்கிற்றேயன்றி அம்மனாலல்ல. அம்மனால் நோய் நீங்குவதாயிருப்பின் பல அதிசய யந்திரங்களைக் கண்டுபிடித்துள்ள ஆங்கிலேயர்கள் ஆயிரக்கணக்கான ஆஸ்பத்திரிகளையும் டாக்டர்களையும், பலவித மருந்துகளையும் விருத்தி செய்திருக்கவே மாட்டார்கள். நோயாளிகளை அம்மன் கோயிலுக்கே அனுப்பிவிடுவார்கள். நம்முன்னோர்களும் பலவகை மருந்துகளோடு வைத்திய சாஸ்திரங்களும் வரைந்து வைத்திருப்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பைத்தியகார செட்டியாரே! நம்முடைய நோய்க்கும் ஆட்டினுடைய உயிருக்கும் என்ன சம்பந்தம்? தெய்வம் மனிதனுக்கு மாத்திரந்தானா! மற்ற ஜீவராசிகளுக்கில்லையா? அப்படி உயிர்க்குயிர் கொடுக்கின்ற சக்தியுள்ள தெய்வமிருப்பின் இதுவரை மாண்டு மண்ணான மன்னர்களும், சாம்பலான சக்ரவர்த்திகளும், படுநெருப்பில் வெந்த உம்மைப் போன்ற பணக்காரர்களும் உயிர்க்குயிர் கொடுத்து விட்டுப் பரம்பரையாய் வாழ்ந்து வரலாமே! அவ்வாறு யாராகிலும் சாகாமல் ஜகத்தில் வாழ்கின்றார்களா?

செட்டி. இல்லை! இது பெரியோர்கள் காலத்திலிருந்து பரம்பரையாய் நடந்து வருவதுதானே!

ஜீவ. பெரியோர் காலமா? எந்தப் பெரியோர்? நம்முடைய பாட்டன் பூட்டன்களாகிய குடிகாரர்களும் கொலைகாரர்களும் களவாடிகளும் கண்மூடிகளுமா பெரியார்கள்? இவர்களையா பின்பற்றி நடப்பது? பலே பேஷ்! செட்டியாரே! நம்முடையபெரியார்கள் என்பவர்கள் நாயன்மார்கள், ஆழ்வாராதிகள், தாயுமானசுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் போன்ற ஞானிகளாவார்கள். இவர்கள் எங்கேயாகிலும் தங்கள் நூல்களில் பலியிடுங்கள் என்று எழுதியிருக்கின்றார்களா? அவர்கள் ஜீகாருண்யத்தையேதான் சிறப்பாகக் கூறியிருக்கின்றார்கள். இப்பெரியோர்களை யன்றோ பின்பற்ற வேண்டும்?

செட்டி. சரிதான் தம்பி! நமக்குத்தெரிகின்றது. பரம்பரையாய் வந்துவிட்டதால் பெண்பிள்ளைகள் ஒப்பமாட்டார்கள்.

ஜீவ. செட்டியாரவர்களே! நம்முடைய பெண்கள் சிறிதும் படிப்பு வாசனை யறியாதவர்கள். அவர்கள் பழைய மூடப்பக்தியை விடத்தான் மாட்டார்கள். நாம் கல்வியறிவு சிறிது பெற்றிருப்பதால் நம்முடைய அறிவால்தான் அவர்களைத் திருப்பவேண்டும். அவ்வாறின்றி அவர்கள் வழியே சென்றால் நாமும் அறிவில்லாப்பேதைகளாவோம். நீங்கள்பகுத்தறிவை உபயோகப்படுத்துங்கள். ஆட்டைவிடு[illegible]தெய்வமும் விரும்பாது.

186926

செட்டி. தம்பி! நீ கூறுவதுண்மைதான். தெய்வம் என்னசெய்யுமோ வென்ற அச்சம் விடவில்லையே!

ஜீவ. ஐயா! அஞ்சாதீர். அவ்வாறு தெய்வம் கோபிப்பதானால் பலியிட வேண்டாமென்ற என்னைப்போன்ற ஆசாமிகளைத்தான் கோபிக்கவேண்டும். இதுவரை எந்தத் தெய்வமும் கோபித்ததில்லை. அவ்வளவு ஏன்? நாம் தெய்வத்தையே பரிசோதித்துவிடுவோமே.

செட்டி. அஃது எப்படி?

ஜீவ. நாம் ஆட்டை ஓட்டிக்கொண்டு போவோம். அம்மன் எதிரில் நிறுத்தி, தாயே! இந்தஆட்டின் உயிரை நீ விரும்புவதுண்மையாயின் அதன் உயிரை வாங்கிக்கொண்டு உடலைப்பிரேதமாகக் கீழேதள்ளு என்றுகேட்போம். அவ்வாறு அம்மன் உயிரை வாங்கிக்கொண்டால் நாம் எத்தனை ஆடுகளை வேண்டுமாயினும் பலியிடலாம்.

செட்டி. தம்பி! சரியான யோசனை! அப்படியே அம்மனைக்கேட்போம்.

மனைவி. ஐயையோ வேண்டாம்! வேண்டாம்! நாம் பழயவழக்கப்படியே செய்துவிடுவோம்.

செட்டி. சீ கழுதை! வாயைமூடு! அம்மா ஆடுதின்ன ஆசைப்படுகிறாளா? தெய்வமென்றால் சகல உயிர்களுக்குந் தாய்தந்தை போன்றது. அது ஒருயிருக்காக ஒருயிரைக் கொலை செய்யச் சொல்லுமா? ஜீவகாருண்யமே சிறந்த தருமமல்லவா? நம்முடைய குழந்தையை அறுக்க மனம்வருமா? நம்முடையவிரலில் ஒன்றை அம்மனுக்கு வெட்டித்தர சம்மதியாத நாம் இந்தஏழை ஆட்டை வெட்டிப் பலியிடுவது வஞ்சகமன்றோ? எது நேரினும் சரி. தம்பி சொன்னதைப்போலச் சந்தேகந் தெளியப்பார்த்துவிடுவோம்.

மூவரும் கோவிலுக்குச் சென்று ஆட்டை அம்மன் எதிரில் நிறுத்தி வெட்டாமல் உயிரை வாங்கிக்கொள்ளும்படி அம்மனை வேண்டி நின்றார்கள். ஒரு மணி நேரம் வரை காத்திருந்தும் அம்மன் உயிரை வாங்கிக் கொள்ளவேயில்லை. கடைசியாக ஆட்டைஉயிரோடு ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். பாற் பொங்கலிட்டு ஏழைகளுக்கு அன்னமளித்தார்கள்.

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபையார்,
436, தங்கசாலைத் தெரு, சென்னை.

# பனையின் பிரயோஜனம்.

மக்களுக்குப் பனைமரம்பலனையளிக்கக்கூடியதே. முதலில்பனை ஓலையில்தான் எழுதிப்படிக்கக் கற்றுக்கொண்டோம். வேதம், புராணம் இதிகாசமுதலிய் நூல்களெல்லாம் எழுதுவதற்குப் பனை ஓலைதான் பிரயோஜனப்பட்டது. பனங்காய், பனம்பழம், பனஞ்சாறு, பனங்கற்கண்டு, பனைவெட்டு, பனங்கிழங்கு முதலியவைகளை யருந்துகின்றோம். பனைமரம்வீடுகட்டுவதற்கும் பனைஓலை வீடுவேய்தற்கும் பாய் தடுக்கு கூடை முதலியன முடைதற்கும் உதவுகின்றன. இம்மட்டோ: பனம்பூவைக்கொண்டு பாணங்கள் செய்கின்றனர். பனைஈர்க்கு நம் தேசத்திலிருந்து கப்பல் கப்பல்களாக அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. பலபடியாலும் பலனளிக்கக்கூடிய பனைமரங்களில் கள்ளுண்டாகிறதென்றும், அவைகளை வெட்டி வீழ்த்தி விட்டால் குடியர்கள் சுகப்படுவார்களென்றும் பறையறைந்துபத்திரிகைகள் வழங்கிவருகின்றார்கள். இதில் புதுத்தமிழர்களுஞ் சேர்ந்தவர்களே. இதைப்பள்ளிக்கூடத்துச் சிறுவர்கட்குப் போதித்துக் கோபுரந்தாங்கிகளைப்போல் கோடரிகளைக் கையிலேந்தி பனைமரத்தைவெட்டுவதைப் போன்ற ஒருவுருவம் செய்து அத்தீயவுருவைக் கும்பிட்டும் வருகின்றனர். இதுவும் கலிகாலமே! இச் சுராபானத்தடை செய்பவர்கள் ஜீவவதை செய்பவர்களையும் புலால்புசிப்பவர்களையும் தடை செய்யலாகாதா? பனைமரத்தை வெட்டிவீழ்த்தின் வேறுவித கள்ளை யுண்ண மாட்டார்களா? பனைமரத்தை வெட்டுவதும், வெட்டும்படி தூண்டுவதும் நியாயமா? (நல்—கண்)

## இலவம் பஞ்சிற்றுயில்

இலவம் பஞ்சிற்றுயில் என்பதற்கு இலவம் பஞ்சு மெத்தையிலே நீ நித்திரைபண்ணு என்று பொருள்.

நமது உடலும் மனமும் நாடோறுஞ் சற்றுநேரம் இளைப்பாறும்படி கடவுள் நித்திரையை இயல்பானகுணமாக நமக்குக்கொடுத்திருக்கிறார். எவ்வித தொழின் முயற்சிகளினாலும் உடம்புக்கும் மனதுக்கும் உண்டாகுந் துர்ப்பலத்தைப் போக்கி நித்திரைநல்லபலத்தையும் ஆரோக்கியத்தையும் அளிக்கின்றது. இதனால் நித்திரை எல்லாருக்கும் இன்றியமையாதது. பகலிலே நித்திரை செய்யலாகாது. இரவிலும் ஒருநாளைக்கு ஆறுமணிநேரத்துக்குமேல் நித்திரைசெய்யலாகாது. நித்திரை ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாகையால், 'ஒத்த விடத்து நித்திரைகொள்." என்றுபிராண்டும்பேசினார். இலவம்பஞ்சுமெத்தையிலே சயனித்தால் நல்லநித்திரைஉண்டாகும். 'மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு.' (க. ஐயாறுப்பிள்ளை.)

உ

# மேனாட்டு ஸ்திரீகளின் குடும்ப வாழ்க்கை விபரீதம்.

---

பூரி ஜகநாதம் ஸ்ரீமத் சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்கள் சமீபத்தில் சென்னையில் இந்துக்களின் விவாஹங்களைப் பற்றிப் பேசியபோது குறிப்பிட்டதாவது:—

மேனாட்டு முறையில் என்ன சுகமிருக்கிறது? முதல் முதலாக மேனாட்டு முறைகள் எவையும் ஸ்திரீகளுக்குச் சமத்துவத்தை அளிக்கவில்லை. சுதந்திரமும் பூஜ்யம்தான். ஹிந்து சாஸ்திரமோ ஸ்திரீகள் பொதுவாழ்வில் வெளிவந்து சுகம்பெறத் தடை ஒன்றும் ஏற்படுத்தவில்லை.

பைபிளில் ஸ்திரீகளுக்கு அஸ்வாதந்திரியம் முதலிய தடை சொல்லி யிருக்கிறது. மேனாட்டில் ஸ்திரீகளுக்கு குடும்ப யஜமானத்துவம் கொடுக்கப்படவில்லை. மனிதனுடைய ஆசைக்குதவும் கருவி என ஸ்திரீ மதிக்கப்படுகிறாள். விவாஹகாலத்தில் அவள்செய்யும் பிரமாணமாவது.— நான் ஜீவதசையுள்ளவரையில் உனக்குக் கீழ்ப்படிந்து நேசிப்பேன் எனவும்; புருஷன் 'நான் உன்னிடம் பிரியமாயிருந்து சந்தோஷ முண்டாக்குவேன்' எனவும் பிரமாணம் செய்து கொள்கிறார்கள். ஏதேனும் புருஷன் பெண்சாதிகளுக்குள் சச்சரவு ஏற்பட்டு, அதனால் குடும்பத்தில் ஏதேனும் அல்லல்கள் உண்டானாலும் விவாஹகாலத்தில் அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட கட்டுப்பாட்டின்படிதான் நடக்கவேண்டும்.

## தவறான சுயேச்சையால் நடந்த விபரீதம்.

மேனாட்டுக்கோட்பாடு ஸ்திரீகளுக்குக் கட்டுப்பாடும், ஹிந்து கோட்பாடு ஸ்திரீகளுக்கு மேன்மையும் அளித்திருக்கின்றன. மனிதனுடைய ஒரு சிறு முதுகெலும்பினால் ஸ்திரீ சிருஷ்டி என்று ஒரு வசனமுண்டு. அளவுப்பிரமாணமாகப் பார்த்தாலும் மனிதனின் ஓர் பாகமென்றே சொல்லவேண்டும். மேனாடு முழுவதிலும்ஸ்திரீகளைத் தெய்வீகத்துவம் உள்ளவர்களாகக் கருதுவதில்லை. மேனாட்டில்ஸ்திரீகளின் ஸ்வாதந்திரியம் என்றசொல்லால் சமூகமும் குடும்பமும் என்ன விபரீத நிலைமை யடைந்திருக்கின்றன தெரியுமா? ஸ்திரீகள் பகிரங்கமாய் ஆண்களைப்போல் வெளிக்கிளம்பின பிறகு குடும்பத்தைக்கவனிக்க முடியாமல் போய்விட்டது. குடும்பம் ஏறுமாறாக மாறிவிட்டது. புருஷன்செய்யும் வேலையை ஸ்திரீகள் செய்ய விரும்பினர். தாங்கள் செய்ய விரும்பியதையும் செய்தனர். இப்போதும் செய்கின்றனர்.



## புருஷன் பெண்சாதி போட்டியால் குடும்ப நாசம்.

அவர்கள் செய்யவேண்டிய வேலையை அலக்ஷியத்துடன் செய்யாமல் விட்டுவிட்டு, மனிதன் செய்யக்கூடாத வேலையை அவர்கள் செய்யஆரம்பித்தனர். நீசெய்யக்கூடாது என்பதற்கும், நான் அப்படிச்செய்வேன் என்பதற்கும் யுத்தம்தொடங்கியது. இந்தயுத்தத்தால் குடும்ப அழிவேஉண்டாயிற்று. மேனாட்டார் விருப்பங்கொண்ட விவாஹ கோட்பாடுகள் ஒன்றுமேகிடையாது. நேசிப்பதும் கர்ப்பமும் விவாஹத்திற்கு முன்னதாகவேஏற்பட்டுவிடும். விவாஹ காலத்தில் குழந்தை பிறக்கும் ஒரு கன்னிகைக்குக் குழந்தைபிறந்து விடுமானால் அந்தக்குழந்தை எனக்குப்பிறந்தது என்று எவன் பாத்தியம்கொள்கிறானோ அவன் தகப்பனாக அநுமானிக்கப்பட்டு அக்குழந்தை நியாயமான பிறப்புஎன்று கருதப்படும். விவாஹங்களைவிட விவாஹரத்தே அதிகம். ஆஸ்டிரியா தேசத்தில்ஒருஸ்திரீ 28 வயதில் விவாஹம் செய்துகொண்டாளென்றும், 56 வது வயது ஆவதற்குள்ளாக 84 தடவைகள் மறுவிவாஹங்கள் செய்துகொண்டாளென்றும்சொல்லப்படுகின்றன. அதாவது வருஷத்திற்கு மூன்று புருஷர்கள் வீதம்கணக்காகிறது. தம்பதிகளாக இருக்கப் பொருத்தமாயிருக்குமா என்றுபார்க்கப் பரீக்ஷார்த்த விவாஹங்கள் நடைபெறவும் யோஜிக்கப்பட்டு வந்ததாம். இதிலிருந்து அவர்கள் சாயம் வெளுத்துப் போகவில்லையா? அம்மாதிரி முறையை அவர்கள் இந்தியாவிலும் புகவிட விரும்கின்றனர்.

ஸ்திரீபுமான்கள் செய்யவேண்டிய கடமைகளிலும் குடும்ப சமாளிப்பு விஷயங்களிலும் ஒழுங்கீனம் அதிக மிருந்துவருகிறது. குடும்பத்திற்கு ஸ்திரீயே முக்கியமானவள். இது கீழ்ப்பட்டவள் என்ற எண்ணத்தாலல்ல. குடும்பத்தைக் கவனிப்பது என்பது கீழ்ப்பட்டகாரியமுமல்ல. ஆனால் சகஜமாக அவளால்தான் குடும்பம் கவனிக்கமுடியும். வேறு எவராலும் முடியாது. இரக்கமில்லாமலும் அநீதியாயும் இந்தக் குடும்பபாரம் அவளுக்கு ஏற்படுத்தப்படவில்லை. ஆனால், அவளுக்கு அது சகஜமே. இவ்வித ஏற்பாடானது சமூகக்கட்டுப்பாடு சமூக ஒழுங்கு இவைகளுக்கு மாத்திரமல்ல. குடும்ப க்ஷேமத்திற்கும் நிரம்ப நன்மை பயக்கக்கூடியது. ஜாதி பூராவும் சௌக்கியத்தோடும் சந்தோஷத்தோடும் ஜீவனம் செய்யவேதான். பிறர் சொல்லுவதை நம்பவேண்டாம். சாவித்திரி, தமயந்திபோன்ற மேன்மைக்குணம் பொருந்திய ஸ்திரீகளின் பழையகாலத்துப்புராணங்களைக் கவனித்து அவைகளில் நம்பிக்கை கொண்டு சிறிது அவர்கள் (ஸ்திரீகள்) சிந்தித்துப் பார்க்கட்டும். பழையகாலத்துப் பாரம்பரைத்தர்மத்தை விடாமலும் புதியவைகளில் நன்மையுள்ளதைமட்டும் கிருகித்துக்கொள்ளட்டும். இந்தியாவுக்குப் பெரும்பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் இந்தியாவே

ஜகத்குரு. இந்தியா பலவிதமாய் நிச்சயமில்லாத வழியில் மாறும்படி விட்டுவிடப்பட்டால் ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்டிப்படுகுழியில் விழுவதுபோலாகும். ஸநாதன தர்மத்தை நழுவவிடாமல் அவலம்பிப்பதால் இந்தியர்கள் என்ற பெருமையை அடைவார்கள். அதனால் முழு உலகத்திற்கே கீர்த்திஉண்டாகும்.

---

## மயிலுக்குத் தோகைவந்த வரலாறு.

முற்காலத்தில் மயில்கள் நீல வர்ண முள்ளவைகளாய் இருந்தன. அவைகளுக்குத் தோகைகள் இல்லை. பின்பு தேவேந்திரனுடைய வரத்தினாலே அவைகள் மயிற்கண்கள் என்று சொல்லப்படும் அழகிய தோகைகளைப் பெற்றன.

திரேதா யுகத்திலே இராவணன் என்ற ஒருராக்ஷஸன் இருந்தான்; அவன் அதிக பராக்கிரமம் வாய்ந்தவன். யாரோடு யுத்தஞ் செய்யலாம் என்று பூமியெல்லாம் திரிந்தான். அப்பொழுது, ஓர் இடத்தில் மருத்தன் என்னும் அரசன் ஒருவன் தேவர்கள் சூழ இருந்து யாகம் செய்வதைக் கண்டான். இராவணனைக் கண்டதும் தேவர்கள் பயந்து அருகிலிருந்த பக்ஷிகளினுட்புகுந்து கொண்டார்கள். இந்திரன் ஒருமயிலாக மாறினான். இயமன் காகவடிவு கொண்டான். வருணன் அன்னப்பறவை யானான். குபேரன் ஒரு பச்சோந்தியுட்புகுந்து கொண்டான். யாகஞ் செய்துகொண்டிருந்த அரசன் இராவணனோடு யுத்தம் செய்யாமல் இருக்கவே அவன், நான் ஜெயித்தேன் என்று சொல்லிக்கொண்டு போய்விட்டான். இராவணன் போன பிறகு தேவர்கள் தங்கள் சுயஉருவங்களை எடுத்துக் கொண்டனர்.

அப்போது இந்திரன் மயிலைப்பார்த்து, 'மயிலே! நீ எனக்கு இடங் கொடுத்தால் உன்பேரில் எனக்குப் பிரீதி அதிகம். நீ இனிப் பாம்புக்குப் பயப்படவேண்டியதில்லை. நான் மழைபெய்யச் செய்யும் பொழுது நீ இன்புறுவாய். அப்பொழுது உன்னால் தோகையை விரித்துஆட முடியும். உன்சிறகில் எனக்குள்ள ஆயிரம்கண்களும் தோன்றி உன்னை அழகுறச்செய்யும்." என்று வரம் அளித்தான். அதுமுதற்கொண்டே மயிலுக்கு ஆயிரம்கண்கள் அமைந்த அழகிய தோகை உண்டாயிற்று.

இயமனும் காக்கைக்கு வரம் கொடுத்தான். என் உலகத்திலுள்ள பிதுருக்களுக்கு அன்னமிட விரும்பும் மனிதர்கள் வாயசபிண்டம் என்று உனக்கு அன்னத்தை இட்டால் போதும். நீ உண்டால்அவர்கள் திருப்தி அடைவார்கள் என்று அவன் சொன்னான். அதனாலேதான் சிராத்தம் முதலிய விசேஷகாலங்களில் பிண்டத்தைக்காக்கைக்கு இடுகின்றார்கள். (லெ. நாராயணையர்)

உ

## சிவாநந்தர் திருவாக்கு.

---

1. வாழ்நாள் அருமையானது. அதனை நல் வழியில் செலவிடவேண்டும். சிந்தனையைத் தெய்வத்தின்மீது திருப்புங்கள்.

2. அசையுங் காற்று உருவம் இல்லாதது. அதனால் நீங்கள் காற்றைக்கண்ணால் காண்பதில்லை. ஆனால், அதற்கு உருவமும் உண்டு. ஏனெனில் நாம் அதனைப் பரிசத்தால் உணர்கின்றோம். காலம் உருவம் அற்றது. ஆனால் அதற்கு உருவமும் உண்டு. ஏனெனில் நாம் 1, 2, 3, என்று எண்ணுகின்றோம். ஜலம், நதி ஓடை வடிவமாயிருக்கும்போது உருவம் அற்றது. ஆனால் பனிக்கட்டியாக இருக்கும் போது அது உருவமுடையதாய் இருக்கிறது. இவ்வாறே கடவுள் உருவம் உள்ளவராயும், உருவம் இல்லாதவராயும் இருக்கின்றார்.

3. நீங்கள்ஒரு மனிதன் காலைப் பிடித்தால் அவன்உங்கள்மீது மகிழ்ச்சி யடைகின்றான். உடம்பின் ஒரு பகுதியைப் பிடித்தால் மனிதன் முழுமையும் மகிழ்ச்சியை யடைகின்றான். கால் மனிதனின் ஒரு பகுதியாகும்.

4. அவ்வாறே ஒரு பிரதிமை அல்லது விக்ரகத்தைத்தொழுவதால் ஈசுரன் மிகுந்த மகிழ்ச்சி யடைகின்றார். விக்ரகம் பஞ்ச பூதங்களாற் செய்யப்பட்டிருக்கிறது. கடவுளின் சரீரத்தில் அந்தப் பஞ்ச பூதங்கள் அடங்கியிருக்கின்றன. விக்ரகம் விக்ரகமாகவே யிருக்கிறது. ஆனால், வணக்கம் கடவுளுக்குப் போய்ச் சேருகிறது. தொடக்கத்தில் விக்ரகத்தை வணங்குவதில் ஒரு தவறும் இல்லை. நீங்கள் விக்ரகத்தில் கடவுளையும் அவர் குணாதிசயங்களையும் பாவனை செய்து கொள்ள வேண்டும். விக்ரகத்தில் மறைந்திருக்கிறஅந்தாத்மாவை நீங்கள் சிந்திக்க வேண்டும்.

5. கடவுளைநம்பிநீங்கள்நியாயத்தைச்செய்யுங்கள். கடவுளிடம் உறுதியாக நம்பிக்கை வையுங்கள். அவர் எப்பொழுதும் உங்களிடம் இருந்து, நாள்எல்லாம் அறுபது நாழிகையும் நீங்கள் செய்யும் செயல்களையெல்லாம் கவனித்துக்கொண்டிருப்பதாக நினையுங்கள்.

6. கடவுள் சத்தியர். அவர் உண்மையே வடிவ மானவர். எனவே நீங்கள் எப்பொழுதும் உண்மையையே பேசுவதால் அவரை அறிதல் கூடும். அரிச்சந்திரன் வாழ்க்கையைச் சிந்தியுங்கள். உண்மை பேசுவது உள்ளத்தைப் பெரிதும் புனிதமாக்குகிறது. நீங்கள் பன்னிரண்டுவருஷம் உண்மையே பேசிவந்தீர்களானால் உங்களுக்கு வாக்கு சித்தி யேற்படும். நீங்கள் சொல்லுவதெல்லாம் உண்மையாகவேமுடியும். வேடிக்கையாகவும் பொய் பேசல்கூடாது.

---

உ

# மதிப்புரை.

---

## சைவ சந்நியாச பத்ததி.

ஸ்ரீஸ்கந்த பரம்பரை சூரியனூர் கோவிலாதீன சைவசமய பரிபாலக சிவாக்கிர யோகீந்திர ஞான சிவாசாரிய சுவாமிகள் வடமொழியில் அருளிச்செய்தது. நான்காம் வருணத்தாருக்குச் சைவசந்நியாசம் உண்டென்பதைப் பிரபல ஆகமப்பிரமாணங்களால் நிரூபிக்கும் பெற்றிவாய்ந்தது. எட்டுப்படலங்களை யுடையது. சைவசந்நியாசிகள் அநுட்டிக்கவேண்டிய விதிகள் எல்லாவற்றையும் பிண்டமாகக் கொண்டுரைப்பது. இதனை, வடமொழிச் சுலோகத்துடன் தமிழ்மொழி பெயர்ப்பையும் வரைந்து பதிப்பித்திருப்பின் தமிழ்ச் சைவ நன்மக்கட்குப் பேருபகாரமாகஇருக்கும். ஏட்டுப்பிரதியிலிருந்தே மங்கிவிடாமல், தக்கோர்களைக் கொண்டு பரிசோதித்து, செவ்வியமுறையில் வடமொழியிலேனும் அச்சிடுவித்து வெளியிட்டருளிய திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனம் சுத்தாத்துவித சைவசித்தாந்த பரமாசாரியராகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மகாசந்நிதானமவர்கள் பெருநன்றியைச் சைவவுலகம் என்றும் மறவாக் கடப்பாடுடையதாகும். மகாசந்நிதானம் இவ்வாறே சைவ வளர்ச்சிக்குரிய பழைய நூல்கள் பலவும் வெளியிடவும், மற்றைய மடாலய சந்நிதானங்களும் இந்நன்முறையைக் கடைப்பிடித்து சைவமுந்தமிழுந் தழைத்தோங்கச் செய்யவும், சிவபெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

*　　　*　　　*　　　*

## மகோற்சவ சந்திரிகை.

யாழ்ப்பாணத்து அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்கள், 'ஈழகேசரி'ப்பத்திரிகையிற் றொடர்பாக எழுதிவந்த 'மகோற்சவம்' என்னும் மகுடந்தாங்கிய வியாசமானது, ஷை பத்திராதிபர் திரு. ந. பொன்னையா அவர்களால் 'மகோற்சவ சந்திரிகை' என்னும் பெயருடன் புத்தகவடிவாக வெளியிடப்பெற்றுள்ளது. இது, சிவபுண்ணியம்—உற்சவவிதி—உற்சவ பஞ்சகிருத்தியம் ஆகியமூன்று வகைப்படுத்து, சரியையாதி நாற்பாதவிளக்கம், நித்திய நைமித்திக விவரணம், உற்சவப் பெயர்ப்பொருள், உற்சவ வகை, உற்சவகால நியமம், உற்சவப் பயன், உற்சவகிரியை செய்வோரடையும் பேறு, இறைவன்புரியும் பஞ்சகிருத்தியத்தின் காரணம், பஞ்சகிருத்தியவகை, கிருத்தியவிளக்கம், வாஸ்துசாந்தி—மிருத்சங் கிரகணம்—அங்குரார்ப்பணம்—பேரீதாடனம்—இரட்சாபந்தனம்—யாகம்—கொடியேற்றம்—மிருகயாத்திரை—கிருஷ்ணகந்தம்—தேர்த்திருவிழா—சூர்ணோற்சவம்—தீர்த்தோற்சவம்—திருவூசல்—மௌனோற்சவம், ஒன்றுமுதல் பத்துநாள்விழாக்களின் தத்துவார்த்தங்கள் ஆகியவற்றை, விசயம் சூக்குமம் உத்தரகாரணம் விம்பம் ஆதிய ஆகமப்பிரமாணம் பலகொண்டு நன்கு விளக்கும் நலனுடையதாகக் காணப்படுகிறது. சிறியகண்ணாடி பெரியமலையைத் தன்னுட் கொண்டுகாட்டுமாறு, இந்நூல் வடிவிற்சிறிதாயிருப்பினும் மகோற்சவ தத்துவார்த்தங்கள் பலவற்றையும் படிப்பார்க்கு எளிதினுணர்த்தும் ஏற்றமுடையதாகும். விழாக்கள் விரதங்கள் முதலியவற்றை வெறுத்துப்பேசும் இக்காலத்துக்கு இந்நூல் இன்றியமையாததொன்றேயாம். இதன்விலை சதம்—30. யாழ்ப்பாணத்துச் சுன்னாகம், 'ஈழகேசரி' நிலயத்திற்பெறலாம்.

*　　　*　　　*　　　*

## நிரோட்ட யமகவந்தாதி.

பாண்டிநாட்டிலுள்ள வேம்பத்தூர்த் தமிழ்ச்சங்கப் புலவர் பரம்பரையினராகிய பிரமஸ்ரீ சௌந்தர பாரதியார், திருநெல்வேலியிலுள்ள வேம்பத்தூர் மடாதிபதிகளாகிய சிவஸ்ரீவாமதேவ சுப்பிரமணிய சிவாசாரியாரவர்களுடைய விருப்பத்தின்படி, குன்றுதோறாடும் சண்முகப் பெருமான்மீது இயற்றியது. நிரோட்டமாவது இதழ்கள் குவிதல் ஒட்டுதல் ஆகிய காரணங்கொண்டு பிறக்கும் எழுத்துக்களின்றிப் பாடப்பெறுவது. இத்தகைய செய்யுட்கள், யமகமும் அந்தாதித்தொடையும் பொருந்திய முப்பதனால் யாக்கப்பெற்றது இந்நூல். இஃதுடன் ஆக்கியோரியற்றிய திருப்பரங்கிரிக்குமரன் தகாரவண்ணமும் சேர்க்கப் பெற்றிருக்கிறது. அந்தாதிக்கு ஆசிரியராலேயே உரையும் வரையப்பெற்றிருப்பது, படிப்பார்க்கு நூற்பொருள் திரிபின்றி யெளிதில் விளங்கப் பயன்படுவதாகும். செய்யுட்களெல்லாம் சொன்னோக்கும் பொருணோக்குமாதிய பன்னோக்கும் பொருந்திய செழுமையுடையவாகத் திகழ்கின்றன. இவற்றின் அருமைபெருமை, பல பண்டிதமணிகள் கொடுத்துள்ள சிறப்புப் பாயிரத்தால் செவ்விதிற் காணலாம். இதின்விலை அணா 2.

*　　　*　　　*　　　*

## ஸ்ரீகைலாசநாதர் பதிகம்—நித்தியகல்யாணி யம்மை மும்மணிக் கோவை.

கண்டனூரைச் சார்ந்த பாலையூர் கைலாசநாதபும் ஸ்ரீ கைலாசநாதர் நித்தியகல்யாணி யம்மை ஆகிய இருவர்மீதும் ஷை யூர் திரு அரு. அ. சபாபதிச்செட்டியா ரவர்கள் விரும்பியபடி, முத்தமிழ் ரத்னாகரம் பானுகவியார் மாணவர் புரிசை சைவத்திருவாளர் சு. முருகேசமுதலியார் அவர்களா லியற்றப்பெற்றவை. பாக்கள் பக்திச் சுவை கனியும் பான்மையுடையவாகக் காணப்பெறுகின்றன. திரு,

முதலியாரவர்களின் பிரசங்கவன்மையும், செய்யுளியற்றுந் திறனும் போற்றற்குரியவே.

* * * *

## கிளிவிடு தூது.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீன பண்டாரசந்நிதியாக எழுந்தருளியிருந்த சிவாநுபூதிப் பெருஞ்செல்வர் ஸ்ரீலஸ்ரீ அழகிய சிற்றம்பல சம்பந்த தேசிகர்பாற் கிள்ளையைத் தூது அனுப்பியதாகப் பாடப்பெற்றது இந்நூல். இதனையாக்கியோர்பெயர்விளங்கவில்லை. என்றாலும், ஷை தேசிகர் மாணவர் குழாங்களுள் ஒருவர் என்பது நூலால் விளங்குகிறது. இதிற் சைவசித்தாந்தக் கருத்துகள் பல அடங்கியுள்ளன. இதனை வழுக்களைந்து பதிப்பித்த திரு. ஐ. பொன்னையா அவர்களின் தமிழ்ச்சைவப்பற்று சாலச்சிறந்ததே. இதன்விலை சதம் 15.

* * *

## தனவணிகன்.

இது, திருவாளர்களான: அ. ராம. அ. கருப்பன்செட்டியாரை ஆசிரியராகவும், சா. அ, அ. கதிரேசன் செட்டியாரைப் பிரசுரக் கருத்தாவாகவும் கொண்டு, பர்மாநாட்டுக்கோட்டையார் சங்க ஆதரவுடன் இரங்கூனிலிருந்து வாரந்தோறும் வெளிவருவது. இதன் நோக்கம் வியாபாரவிருத்தி, பொருளாதார நிலையைச் சீர்படுத்தல் ஆதியவாம். தன்பெயருக் கேற்ப தனவணிக சமூகத்திற்கும், தனவணிகர்களின்சமயாசாரத் தெய்வக்கொள்கைக்கும் தக்கவாறு ஊழியம் புரிந்து கனம்பெறுவாகுக.

* * *

## தமிழரசு.

சென்னையிலிருந்து வார வெளியீடாக வந்துகொண்டிருந்த இது, டாக்டர் திரு. மே. மாசிலாமணி முதலியா ரவர்களை ஆசிரியராகக் கொண்டு இதுபோது திங்கள் வெளியீடாகத் திகழ்கின்றது. இதனது மலர்—4: இதழ்—3 வரப்பெற்றோம். செந்தமிழ் வளர்ச்சிக்குரிய பல கட்டுரைகள் காணப்பெறுகின்றன. இத்தகைய வெளியீடுகள் பலவும் தமிழ்மக்களால் ஆதரிக்கப் பெறுதல் தண்டமிழ் தழைத்தற்குச் சிறந்த சாதனமாகும். இதன் வருடசந்தா உள்நாடு ரூ 1. வெளிநாடு ரூ 2. விலாசம்:—மானேஜர், தமிழரசு ஆபீஸ், 31–வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

[மேலுள்ள 'சைவ சந்நியாசபத்ததி'' என்னும் நூலின் பிரதியொன்று எமக்குக் கிடைக்கும்படி கட்டளையிட்டருளிய தருமபுர ஆதீனஉயர்திரு மகாசந்நிதானம்அவர்கட்கும், மற்றைய நூற்பிரதிகளையும் பத்திரிகைகளையும் அனுப்பியுள்ள ஆசிரியர்கட்கும் எமதுநன்றி யென்றும் உரியதாகுக. ப–ர்]

உ

# சங்கரநயினார் கோயில் சம்பந்தமான செய்திகள் உள்ள நூற்பகுதிகளும் தனிப் பாடல்களும்.

[பின்னே காட்டப்பெற்றுள்ள பல நூற்பகுதிகளும் தனிப்பாடல்களும், இத் தலத்திற் செய்யப்பெற்றுள்ள சில திருப்பணி வரலாற்றையும் வேறு சில வரலாற்றையும் தெரிவிக்கின்றன.]

## திருவருட்பாமாலைப் பகுதி.

[இந்நூல் முன்பு ஊற்றுமலை ஸமஸ்தானத்தலைவராக இருந்த மருதப்பத் தேவர்மேல் கன்றுப்பூர்க் கவிராயர் இயற்றியது.]

### கலிவெண்பா.

மணிகொண்ட பொன்மதிலு மாளிகையுஞ் சூழக்
கணிகொண்ட ராசைக் கனியே—பணிகொண்ட
புற்றிடமும் வெள்ளிப் பொருப்பிடமும் பொய்தீர்ந்த
மற்றிடமும் வாழு மறைமுதலே—சொற்றெரிந்த
பாவுடையா னேவும் பழம்பொருளே பைங்கிளிநேர்
ஆவுடையா ளைப்புணரு மாதியே—காவிடங்கொள்
பொன்னு கமுநெடிய புன்னு கமுமிரண்டு
பன்னு கமும்படைத்த பானுவே—எந்நாளும்
நாக சுனையி னனைவார் வினையகற்றி
மாகமுற வைக்கு மகேசனே—சாகரத்தின்
உண்மருந்து கொண்மினென வும்பருக்கு மிம்பருக்கும்
மண்மருந்து நல்கும் வயித்தியனே—தண்மலிந்த
பாதி மதிச்சடையும் பைம்பொற் கிரீடமும்பொற்
றூதவிழ்ந்த கொன்றையும்பூந் தண்டுளவும்—சோதிதரும்
சங்கக் குழையுந் தனிமகர குண்டலமும்
செங்கைப் பணிலமொடு திகிரியும்—தங்குமணிக்
கண்டிகையும் பாம்புங் கவுத்துவமும் பொன்னணியும்
புண்டரிக வீருரியும் பொற்றுகிலும்—கண்டுகண்டு

காரேறு வானிற் கவினிந் திரசாபம்
நேரே நிமிர்ந்தெழுந்து நின்றதென்ன—வாராத

விச்சை தரும்பவள மென்மலையும் பொன்மலையும்
பச்சை மலையுமொருப் பட்டதென்ன—அச்சுதனோர்

பாக முறலாற் பசுமையொடு செம்மையிரண்
டாகமுறுஞ் சங்கரநா ராயணனே—யோகமுறும்

பொங்கரவஞ் சூழ்ந்திறைஞ்சப் புற்றினிடத் தேயெழுந்த
சங்கரநா ராயணனே சம்புவே—எங்கள்குல

தெய்வமே யெவ்வுயிர்க்குந் தீரா வினைதீர்க்கும்
சைவமே சீராசைச் சங்கரனே—பொய்வினையேன்

ஆறா விடரூற் றழைத்தாற் றிருச்செவிக்கங்
கேறாதோ வென்றெதிர்நின் றேத்தினேன்—ஆறாரும்

கற்றைச் சடையான் கணநா தரிலொருவன்
மற்றைச் சிவன்போல் வடிவாகிப்—பொற்றொடையார்

செக்கர்ச் சடையுந் திருநீறுங் கண்டிகையும்
தொக்க புயநான்காய்த் தோன்றியே—மிக்க

முறையிட் டவனாரென் முன்னுரையா யென்ன
இறையிட்ட மாய்நின் றிசைத்தான்—திறையிட்டுப்

பூவேந்தர் போற்றும் புலமைக் கரசான
பாவேந்தர் போற்றும் பலகலையும்—நாவேந்து

குன்றாப் புகழான் குவலயமெ லாமகிழும்
கன்றாப்பூர் வாழுங் கவிராசன்—என்றுதிரு

நாமம் படைத்துடையோ னென்றே னதனையும்
தாமம் படைத்தவர்முன் சாற்றவே—காமனுடல்

தீயழலாச் செற்றோன் றிருச்செவிகேட் டுக்குழைந்து
கூயவனை யிங்கே கொணர்தியெனத்—தாயனையான்

ஏவா முனம்வந் தெனைவா வெனவழைத்துத்
தேவாதி தேவன் றிருக்கொலுவில்—மேவும்

அயனெடுமா லிந்திரனு மண்டர்முனி வோரும்
சயசயவென் றேத்துஞ் சபையில்—முயலும்

நெருக்கொதுக்கிச் சன்னிதியி னேரே நிறுத்த
உருக்கியருட் பாடல்செய லுற்றேன்—பொருக்கெனவே



வீழ்ந்தே னெழுந்தேன் விழிநீர் பொழியவடி
தாழ்ந்தே னருளிற் றடைப்பட்டேன்—ஆழ்ந்தபணி
பூண்டவனே போற்றிமண் ணிற்புண் ணியனே போற்றியென்
ஆண்டவனே போற்றியெனவாலித்தேன்—நீண்டசடை[னை

ஆவுடையாள் பங்கா வருட்பார்வை காட்டியெனைக்
காவுடையா யென்றுகண்ணீர் காட்டினேன்—தேவர்க்

கொருவா னவனிரங்கி யுன்வரவே தென்று
திருவாய் மலர்ந்தருளிச் செய்தான்—

* * * *

மற்றிடமு மின்றி மனையுங் கிடையாமற்
புற்றிடத்திற் போந்துகுடி புக்கிருந்தோம்

* * * *

ஏவுடையா ரிட்ட விருநாழி நெல்லையுநம்
ஆவுடையா ளுக்கென் றளந்துவிட்டோம்

* * * *

கண்டிதமாய்ச் செய்யுங் கவியறியோம் புற்றுமண்ணொன்
றுண்டதனை யாங்கே யுவந்தெடுத்தே—உண்டை

அரைத்துரைத்துக் கைசலிப்ப தாவுடைக்கு வேலை
உரைத்தொழுக்க வேலைநமக் குண்டே—உரைத்துணநாம்

மண்ணைக் கொடுக்கினுங்கை வாசியுண்டேன் பாரதனாற்
புண்ணைப் புரைகளைப் போக்குவிப்போம்—உண்ணவும்வே

றாதியமில் லாதா வுடையாளு நாமுமறப்
பாதியுடம் பானோம் பசுமைகாண்

* * * *

பண்டிதனு மென்றீர் பசிப்பிணிக்கு நீரெனக்கோர்
உண்டைமருந் தேனு முதவிடீர்

* * * *

ஏந்து சடையானை யெம்பெருமா னைச்சிவனைச்
சாந்தமதி கங்கை தரித்தானை—ஆய்ந்தசிவ

சங்கரனை ராசைத் தனிப்பொருளை யாவுடையாள்
பங்கரனைத் தெண்டனிட்டன் பாகவே—அங்கருளிச்

செய்த படிக்குன் றிருக்கொலுவின் முன்வந்தேன்
வெய்ய கலியிருள்போய் விட்டதே.

## வனச விடுதூது.

[இந் நூல் ஊற்றுமலை ஸமஸ்தானத் தலைவராக இருந்த நவநீத கிருஷ்ணதேவர்மேல் கன்றாப்பூர்க் கவிராயர் இயற்றிய பிரபந்தம்.]

சீராசை யாவுடைய தேவிபுணர் புன்னைவனத்
தாரார் சடைப்பரனுக் கன்புமிகப்—பேராளு
மிக்கான பூசனைநை வேத்யமறைக் கட்டளையும்
எக்கால முந்தவறா தேநடத்தி.

---

## சவ்வாது விடுதூது.

[இந் நூல் வடகரைஜமீந்தாராக இருந்த திரிகூட ராஜகோபால துரையின்மீது பாடப் பெற்றது.]

— தையலொரு
பாகன் சிவாயப் பரனுக்குந் தேன்கூழை
நாகசுனை யாவுடையா ளுயகற்கும்.........
......... ......... ......... .........
நடத்துமறைக் கட்டளைக்கோ.

---

## சந்திரகலாமஞ்சரி.

[இந் நூல் வடகரை ஜமீந்தாராக இருந்தபெரியசாமிசெம்புலிச் சின்னணைஞ்சாத்துரையின் மாப்பிள்ளையாகிய பெரியசாமித்தேவர் மேல் கடிகைமுத்துப்புலவர் பாடியது.]

நறைக்கட் டளைக்குமலர் நாகவனத் தாற்கும்
அறைக்கட் டளைப்படியுண் டாக்கிச்—சிறக்கவே
ஆலயமு மண்டபமு மன்னசத்ர சாலையும்பூஞ்
சோலையுஞ் செய்த சுகிர்தவான்.

---

## வடகரைச் சின்னணைஞ்சாத்துரை பட்பிரபந்தம்.

[இதனை இயற்றியவர் கடிகைமுத்துப் புலவர்.]

திருமலையாண் டவர்தமக்குத் தினபூசை யொடுதேரும்
திருநாளு நடக்கவே கூவாய் குயிலே.



கருதுசொக்கர் சங்கரர் நெல்லையப்ப ருக்குமறைக்
சட்டளைகள் தழைக்கவே கூவாய் குயிலே.

---

## பெரியசாமிச் சின்னணைஞ்சாத்துரை விறலி விடுதூது.

அன்னா ளறம்வளர்த்தா ளாதலினா லாவுடைத்தாய்
தன்னா யகனுமவ டானுமே—இந்நாளில்
இந்தத் தருமம்வளர்ந் தேற வெழுந்தருளி
வந்திருக்கு மம்பொன்மலை மாதினுக்கும்—இந்தணியும்
சங்கரலிங் கர்க்குந் தரும்பூ சனைநடத்திப்
பங்கயமு நீலோற் பலமலரும்—மங்காத்
தடங்களுஞ்செய் வித்தே தங்குதற்கங் கங்கே
இடங்கள் வெகுவசதி யென்ன—மடங்கள்பல
கட்டித் திருப்பணிகள் கட்டளைக ளர்ச்சனைகள்
மட்டற்ற பொற்பணிகள் வாகனங்கள்—கட்டுபரி
வட்ட முதலமைத்து வாய்த்தசிறு காலசந்திக்
கட்டளையே கோலா கலஞ்சிறந்த—குட்டமென
ஆவலுடன் செய்யுமன தன்பினா லாதிவிண்டு
தேவனிவ னன்றிநர சென்மமோ—பூவுலகில்
என்னப் பெரியோ ரெடுத்தியம்பும் பாக்கியவிற்
பன்னப் பிரபலஞ்சேர் பத்திமான்.

---

## தனிப்பாடல்கள்.

[பின்னுள்ளவை வடகரை ஸ்தானாபதியாக இருந்த பொன்
பலம் பிள்ளை இயற்றியவை.]

### வெண்பா.

புற்றெங்கே புன்னை வனமெங்கே பொற்கோயிற்
சுற்றெங்கே நாக சுனையெங்கே—இத்தனையும்
சேரத்தா னங்கிருக்கத் தேவநீ தான்றனித்துத்
தூரத்தே வந்ததென்ன சொல்.

விள்ளுவமோ சீராசை வீடுவிட்டுக் காடுதனில்
நள்ளிருளிற் செண்பகக்கண் ணைம்பியான்—மெள்ளவே
ஆடெடுக்குங் கள்ளரைப்போ லஞ்சா தெமைக்கரிசற்
காடுதொறு மேயிழுத்தக் கால்.

கட்டளைக் கலித்துறை.

காவிக் கலையிலை யோகப்ப லேறக் கடலிலையோ
ஆவிக்கு மீளப் பிறப்பிலை யோகல்வி லம்புதனை
ஏவிப் பிளப்பது போலே யிதமறி யாதவரைச்
சேவிப்ப ரோசிவ சங்கர ராசைச் சிவக்கொழுந்தே.

---

இந்நூல் எழுதப்பெற்றிருந்த எட்டுப் பிரதிகள் இரண்டனுள் ஒன்றன் முதலில் பின்னுள்ளவை வரையப் பெற்றிருந்தன.

கட்டளைக் கலித்துறை.

பேதை தனக்குப் பிராயமு மேழு பெதும்பைக்கொன்ப
தோதிய மங்கைக்குப் பன்னிரண் டாகு மொளிர்மடந்தை
மாதருக் கீரே ழரிவை பதினெண் மகிழ்தெரிவைச்
சாதிமு வேழெனும் பேரிள நாலெட்டுத் தையலர்க்கே.

போரணியும் வைவேற் புரவலரும் வாழிமிகு
சீரணியு மாவுடைய தேன்வாழி...............
...............சங்க ரேசருலா வாழி .................

வாராசை சுவாமி சங்கரலிங்கம்பேரில் உலா செங்கோட்டைத் தோப்பையா கவிராசரது எடுத்தபேர் படிச்சுக் கொண்டு திரும்பக் கொடுத்துவிடவும். ஆவுடையம்மன் துணை.

---

## சங்கரலிங்க உலாவிற் கண்ட விஷயங்கள்முதலியவற்றின் அகராதி.

[எண் கண்ணி எண்.]


அகத்தியர்க்குச் சங்கரநாராயணர் பஞ்சாட்சரப் பொருளை உபதேசித்தது, 26, 288.
அகத்தியரால் இந்திரனது யாகம் முடியாமற் போனது, 151 - 3.
அடியார் காணிக்கை செலுத்தல், 38.
அம்பாவை - திருவெம்பாவை, 82.
அம்பிகைக்கு இறைவன் சங்கரநாராயணத்திருவுருவம்காட்டியது, 13 -5, 19, 284 - 5.
அம்பிகையின் சாபத்தால் தேவனொருவன் புலையனானது, 22.
அம்பிகையின் பச்சையுருவம், 118.
அரம்பையர்பசுக்களாகவந்தமை, 8-10.
அளகக்காடு, 200 - 201, 249.
ஆயிரங்காத்து வாணன் முழவம் வாசித்தல், 106.
ஆர்ப்பெடுப்ப, 108.
ஆவுடைய நாயகி, 8 - 9, 30, 43, 104, 144 - 163, 284, 303.
இந்திரன், 2.
இறைவன் காதில் இசைவாணர் இருவர் இருத்தல், 31.
ஈசனெழுதக்கோவை பாடினோர், 281.
உக்கிரபாண்டியன் இத்தலத்தில் கோயில் எடுப்பித்தது, 23, 110, 287.
உமை, 4.
எழுமுனிவர்
ஒருசுனையைத்தேவர் திருத்தியமைத்தது, 11.
ஒரு மறையவன் பொருளை வவ்விய ஒரு சோழன்பிணியை இறைவன் தீர்த்தது, 25, 111, 136.
கல்லானைக்குக் கரும்பருத்தியது, 309.
கற்பூரம் சாத்துதல், 69.
காணிக்கைச் செம்பொன், 38.
காதிலிருவர் சங்கீத நாதனார், 31.
காமாகமநூல், 260.
காவை வடமலைப் பிள்ளையனார், 301.
கானவன் ஒருவனை இறைவன் ஆண்டது, 28.
குழலுக்குச் சோலைஉவமை, 249.
கூழைப்பதி, 306.
கொக்கரி - ஓர்இசைக்கருவி, 107.
கொண்மூ முழவு, 236.
சங்கபற்பர், 18, 33, 140, 286.
சங்கபற்பர் சிவபெருமானும் திருமாலும் மெய்ப்பொருளென்று தம்முள் மலைந்தது, 17.
சங்கபற்பருக்கு இறைவன்சங்கரநாராயணத் திருவுருவங் காட்டியது, 19, 286.
சங்கபற்பருக்கு வரமளித்தது, 20-21.
சங்கர நாராயணர், 5, 13-6, 19, 34, 109, 142, 285 - 6.
சங்கரன், 30, 246.
சந்திரனுக்குக் கண்ணாடி உவமை, 73.
சம்பந்தர், 155, 269.
சமயத்தலைவர், 89.
சயந்தனுக்கு இறைவன் காக்கைவடிவம் தீர்த்தது, 27.

சித்திரைமாதம், 39.
சித்திரைத் திருநாள், 39.
சித்ரகூடம், 283.
சின்னம், 310.
சீராசை, 87, 246, 262.
செக்கச்சிவந்த, 142.
செடாடவி, 39.
தசாங்கம், 261 - 5.
தள்ளாடும், 233.
தாரை - கண், 256.
தியாகராச மூர்த்தி, 84.
திரிபதகை, 50.
திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் என்பைப் பெண்ணுக்கியது, 155.
திருத்தொண்டர் கூட்டத்திற்குப் பாற்கடலுவமை, 87.
திருமால், 1.
திருமால் பதினாறாயிரம் மனைவிமாரை யுடையவரென்பது, 264.
திருமாலாகிய இடபம், 35, 98, 121, 264.
திருமாலும் கண்ணப்ப நாயனரும் கண்ணைச்சாத்தியது, 203.
திருமுகம் அனுப்புவோர், 36.
தெள் - தெண்மை, 3.
தென்வரை, 261.
தேர்ப்பவனி, 205, 220.
தேவர் சோலையாக ஆனது, 8 - 9.
நகுடன் வானரசு நாடி மகம்செய்தது, 152.
நவசித்தர், 105.
நாகசுனை, 28, 138, 151.
நாகவனத்தான், 266.
நாட்கொள்ளுதல், 191.
நீறு - 241.
நோய்க்கு மருந்தளிப்பான், 136.
பகுந்து, 180, 243.
பச்சைக் கருப்பூரம் சாத்துதல், 69.
பச்சை யுருவம், 7, 118.
பசுவைக் கொன்ற பழியை ஓரந்தணனுக்குப் போக்கினது, 29.
படியெடுப்பு, 188.
பவனி, 205, 220.
பிரமதேவன், 1.
புகலியர்கோன், 269.
புற்றிடத்து மண்மருந்து, 25, 111, 136, 182.
புற்றூடினிதமர்ந்தான், 162.
புன்னைநிழலில் அம்பிகை தவஞ் செய்தது, 12.
புன்னைவனம், 6, 18, 29, 31, 137, 143, 149, 162, 204, 214, 266, 283-4, 312.
பூணூலுக்கு நிலவு உவமை, 61.
பேழைச் சடை, 306.
பொதுநோக்கு, 154.
மகரயாழ், 115, 215, 218.
மங்கையர்க்கரசி, 276.
மண்டல விழா, 299.
மதனூல், 208, 260.
மாதர் எழுவர், 103.
மாலையொருபக்கத்திருத்தும் பரம்பொருள், 142.
முசுகுந்தன் தியாகராச மூர்த்தியைப் பூமியிற்கொண்டு வந்தது, 84.
முப்பத்து முக்கோடிதேவர், 37.
மூவர், 37, 55, 74, 278-81.
மேரு, 150, 244.
மேருவரை மானதவாவி, 117.
மேருவரையில் வாடைபிறத்தல், 150, 244.
மேருவைச் சூழ்ந்த எழு மலைகள், 92.
வடமலையாரம், 299.
வடிந்தகுழை, 166, 192.
வரராசை, 184, 204, 246, 296.
வளையல்விற்றதிருவிளையாடல், 121-2.
வன்மீக நாதனர், 32, 162.
வேய் முத்தை வேண்டிவளர்த்தோன் ஒரு பாண்டியன், 85.


உ

# செய்தித் திரட்டு.

குன்றக்குடி:—உத்தரத்திருநாள் பங்குனி கஅஉ தொடங்கி உஎஉ வரை இனிது நடைபெற்றது. விநாயகரும் வீரவாகுதேவரும் முன்வர, ஸ்ரீ வல்லிதேவசேனாசமேதராய் ஆறுமுகத்தண்ணல் திருவுலாப் போந்தருளிய காட்சி பக்தர்களுக்கு மிக்க பரவசத்தை யளித்தது. உகூஉ தேர்த்திருவிழாவும், உஎஉ மயிலாடுபாறை மண்டபப்படியும் சிறப்பாகவே நடைபெற்றன. மயூரகிரி மாநகரெங்கணும், வழிமார்க்கங்களினும், மேளவாத்தியங்களும் அரகர முருகன் வேலுமயிலும் என்னும் ஆரவாரங்களும் பெருமுழக்கத்தைச்செய்தன. பக்தர்கள் சர்க்கரை, பால், தயிர், பனிநீர், சந்தனம், இளநீர் ஆதிய அபிடேக திரவியங்களைக் காவடிகளிலும் குடங்களிலும் நிரைநிரையாகக் கொண்டு வந்துசேர்த்தனர். காவடி கொணர்ந்த அன்பர்கள் புதிய பீதாம்பர தாரிகளாய், சந்தனம் மருமலர்மாலைகள் தரித்த மார்பினராய் மிகப் பொலிவுடன் விளங்கினர். வேல்தரித்தும் தழல் விளையாடியும் வந்தமகிமைகளும், அங்கப்பிரதக்ஷணம், கும்பிடுதண்டம், கரும்புத்தொட்டில், பிரார்த்தனைகளை நிறைவேற்றியவர்களின் அன்பின் திறனும் போற்றுந் தகையவாகும். அன்பர்களால் அடியார்குழாங்களுக்கு ஆங்காங்கு அன்னதானஞ் செய்து உபசரிக்கப்பெற்றது. திருவீதிகளில் தண்ணீர்தெளிக்கப் பெற்றும், பந்தர்க ளமைக்கப்பெற்றும் குளிர்ச்சியைச் செய்திருந்த போதிலும், வருணனும் முருகப்பெருமான் றிருவருள் பெறுவான்வேண்டி மழையை வருஷித்து உத்தரத் திருநாளில் குளிர்வித்தனன்.

இத் திருவிழாவில் பரிமணங்குடி வித்துவான் திரு. மு. முத்துப்பிள்ளை அவர்கள் கூறிய துதிகளுள்,

> வண்ண மயூரகிரி வாழ்குமர வேள்திருமுன்
> எண்ணில் தரும மியற்றுசெல்வ—நண்ணு
> தனவணிகர் வாழியெனச் சத்திவடி வேலன்
> வனசமலர்த் தாடுதிசெய் வாம்.

என்பது வாழ்த்து.

ஆத்தங்குடி ஸநாதன தர்ம மகாசபையார் திருத்தேரன்று, செ, கா. அன்ன சத்திரத்தில் கூடினர். ஸநாதன தர்மிகளான திருவாளர்கள்:—நாகசாமிசாஸ்திரியார் தலைமையில், சக்கரவர்த்தி யையங்கார், மணவாளையங்கார் சுப்பிரமணியசாஸ்திரியார், இராமபத்திராசாரியார், சு. வீர. கதிரேசச்செட்டியார், நாகசாமி ஐயர், பாலையூர் அண்ணாமலைச் செட்டியார் ஆகியவர்கள் உரையாடினர். குடிவாடா ஆந்தரகவி ஆஞ்சிநேய கவிராயர் வாழ்த்தும், மு. திருவேங்கடமையங்கார் வந்தனமும் கூறினர். அன்னசத்திரத்தார் இடவசதி அளித்து உபசரித்த நன்றி பாராட்டத்தக்கது.

திருவொற்றியூர்:—10—3—1933-ல் மகிழடி மகோற்சவம் நடைபெற்றது. இம்மாதிரி மகோற்சவங்களில் பஞ்சமர்கள் துராகிருதப்பிரவேசஞ் செய்யாமற் பாதுகாக்க முயல வேண்டியது, தர்மகர்த்தர்கட்கும் ஸநாதனிகட்கும் முக்கியகடையாகும்.

காரைக்குடி:—நகரசபைத்தலைவர் திருவாளர், திவான்பகதூர், ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரவர்களும் அங்கத்தினர்களும் சென்னை மாகாண முதல் மந்திரி ஹானரபிள் பொப்பிலிராஜா அவர்களை 31—3—1933 ல் வரவேற்று, உபசாரப்பத்திரம் வழங்கினர்.

ஸ்ரீஇராம நவமி உற்சவம், ஏகாதசிமடத்தில் இனிது நடைபெற்றது.

ஸ்ரீகொப்புடையம்மனுக்கு வழக்கம்போல் வர்த்தகக்கூட்டத்தினரால் வருஷப்பிறப்பன்று மகா வைபவமாகத் திருவுலாச் செய்யப்பெற்றது.

தனவணிகப் பிரபுவுக்குத் தனயனாய் வந்த மைனர்:— ஒரு ரூபா கொடு; பிள்ளைக்கிட்ட பொற்சங்கிலியைக் கொடு; என்று மனைவிபால் யாசிக்கும் நிலைக்கு வந்தாராம். என்னே! மைசூர் வர்த்தகருறவின் மகிமை.

கோனாபட்டு:—ஸ்ரீஇராம நவமி உற்சவம் அழகப்பெருமாள் ஊருணி வடகரையில் ஷெ ஊருணிச் சொந்தக்காரருக்குப் பாத்தியமான கட்டிடத்தில் கொண்டாடப்பெற்றது. ஆவுடையார்கோயில் ஸ்தல புராண படன மறைத்திருவாளர் சுந்தர சாஸ்திரிகள் கதை, கச்சேரி காலக்ஷேபங்கள் நடத்திச்சிறப்பித்தார்கள்.

கற்பக விநாயக கலாசாலையில், இம்மதி அ௨ திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசையும் திருவுலாவும் சிறப்பாக நடைபெறும்.

புத்தக வரவு:—பரிமணங்குடி வித்துவான் திரு மு. முத்துப்பிள்ளையவர்களிடமிருந்து, ஷெயாரியற்றிய "வெள்ளூர் உடையவர் கோயில் தோத்திரப்பிரபந்தம், சிங்காரவேலர் ஆசிரியவிருத்தம், பரிமணங்குடி சண்முகக்கடவுள் திருப்பதிகம், மார்கழிசஷ்டி மகாத்மியம்" என்னும் நான்கு புத்தகங்கள் வரப்பெற்றோம். மார்கழிச்சஷ்டி மகாத்மியத்தை கணேசபக்தராகிய நாட்டரசன் கோட்டை திருவாளர் கரு. கு. ப. கருப்பன் செட்டியாரவர்கள் அச்சியற்றி உபகரித்தது போற்றற்குரியது. இப்புத்தகங்களை நமக்கு அனுப்பித்தந்தமைக்கு நன்றிபாராட்டுகிறோம்.

சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தகசங்கத்தின் 1932 ம் வருடாந்தர அறிக்கைவந்து வரலாறுகள் தெரிந்து மகிழ்வுற்றோம்.

"அன்பு" என்னும் வியாசமடங்கிய புத்தகம், தத்துவ விளக்கப்படத்துடனும், பதினாறுபேறுகள் வேண்டுதல் பத்திரமும், திருநெய்த்தானத்துக் கனித்தாயுள்ள பனையூர் சிவநேசச்செல்வர் சு. செல்லப்ப முதலியாரவர்களிடமிருந்து வரப்பெற்று அவர்கள்பால் அன்பு செலுத்துகிறோம்.

---



தேதிப் படங்களின் வரவு:—சென்னை, 746- திருவல்லிக்கேணி ஹைரோடு, சோல்டன் கம்பேனியாரிடமிருந்தும், சென்னை, ரூனை 1/16 திருவேங்கட முதலியார் தெரு, நார்ட்டன் கம்பேனியாரிடமிருந்தும் 1933 ம்வருடத்துத் தேதிப்படங்களும், அமராவதிபுதூர் மு. அ. ஓட்டு மில்லிலிருந்து ஸ்ரீமுக வருடத்துத் தேதிப்படமும் வரப்பெற்றோம். அவர்கட்கு நமது நன்றியுரியதாகுக.

சென்னை:—வேதாகமோக்த சைவசித்தாந்த சபையின் 75—ம் ஆண்டு விழா, இம்மதி ௯, ௨௳களில் உயர்திரு மறைமலையடிகள் தலைமையில் விரிவுரைகளுடன் இனிது நிறைவேறியதாகத் தெரிகிறது.

சைவசமய பக்தஜன சபையினர், இம்மதி ௪௳ இரவு 9 மணிக்குச் சென்னையிலிருந்து ரயிலேறி ௨௳ காலை தஞ்சாவூர் வந்து, அன்றுமுதல் இன்றுவரை திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம், திருமழபாடி, திருப்பெரும்புலியூர், திருவடகுரங்காடுதுறை, திருவாலம்பொழில் தஞ்சைராஜேச்சுரம் ஆகியதலங்களை அடைந்து, ஆங்காங்கு மூர்த்திகட்குத் திருமஞ்சன திருவாராதனைகளுடன் திருக்கோயில் வழிபாடும், தமிழ்வேத பாராயண மாகேசுவர பூசைமுதலியனவும் செய்துவருகின்றனர். நாளை சென்னை சேர்வர்.

சைவ உணவின் சிறப்பு:—கீழ் ஆப்பிரிக்காவில் அகிகியு என்ற இடத்தில் ரசாயன நிபுணர்கட்கு ஆகாரத்தின் இயல்பினை அறிவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்துளது. அங்கு ஆண்கள் தாவர (சைவ) உணவுகளும் பழங்களும் பெண்களுக்கே உரியன என்று ஒதுக்கிவிட்டு மாமிசத்தையும் ரொட்டிகளையுமே புசிக்கின்றனர். ஆகவே, அப்பகுதியிலுள்ள ஆடவரெல்லோரும் மெலிந்தும் சக்தி குறைந்தும் ஈரல் பலமின்றியும் பார்வை குறைந்தும் காணப்படுகின்றனர். அன்றி, மலபந்தத்தாலும் தீர்க்க முடியாத வியாதிகளினாலும் துன்புற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆனால், பெண்கள் புருஷர்களால் வெறுக்கப்படுகின்ற மரக்கறி உணவுகளை ஏராளமாக உண்ணுவதால் கொழுத்த உடலுடனும் கட்டுமுட்டான தேகத்துடனும் ஆரோக்கியமான அமைப்புடனும் தோற்றுகின்றனர். அவர்களுடையமுக்கியமான ஆகாரம் பலசெடிகளுடைய இலைகளால் செய்யப்பட்ட ஒரு கூட்டாகும். இக்கூட்டை ஆராய்ச்சிசெய்துபார்த்த போது இரும்பு, சுண்ணம்பு, மங்கனீஸ் ஆகியவற்றால் சிறந்திருந்ததாகக்காணப்பட்டது. கர்ப்பஸ்திரீகள் குழந்தைகள் பிரசவிப்பதற்கு முன்பு அதிகமான 'சிவப்பு மில்லட், (தினை) என்றதானியத்தைப்புசிக்கின்றார்கள். இப்பெண்களை அவர்களுடைய புருஷர்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் அதிகமான வித்தியாசமிருப்பதைக்காணலாம்.

186926

நேமத்தான்பட்டி:—அழகியதேவி வாசகசாலையின் முதலாண்டு வி
இம்மதி சூ திருநாவுக்கரசு சுவாமிகள் வித்தியாசாலைக் கட்டிடத்தில், பு
ரைத் தமிழ்ச்சங்கக் காரியதரிசி திருவாளர் எஸ். சோமசுந்தர பாரதிய
அட்வகேட் அவர்கள் தலைமையில் மாணவர்களும் பலபேரன்பர்களும் ஏ
வுரை நிகழ்த்த இனிது நடைபெற்றது.

ஆவினிப்பட்டி:—விவேகானந்தர் கல்விக்கழகத்தின் ஆறும் ஆண்
பத்தாம்மாதக்கூட்டம் கயி. வினைதீர்த்தாசாரி தலைமையில், 13-4-33
நன்கு நடந்தது. மாணவர் ஆத்திக ஒளி வீசும் அரும் பொருள்கள் ப
வற்றை எடுத்துரைத்தார்கள்.

**பண்டிதமணி யவர்களின் ஈழநாட்டு விஜயம்:**—மகிபாலநகர் பண்டி
மணி திரு. மு. கதிரேசச் செட்டியார்வர்கள் செந்தமிழ் சிவணிய யாழ்
பாணத்துக்குச் சென்று தலைமை வகித்தும் பெருஞ்சொல்லாற்றியும் ஒ
வாரம் அரிய நலம்புரிந்தார்கள். தற்போது கொழும்பு மாநகரில் சொ
பொழிவாற்றி வருகின்றார்கள். அவர்கள் பல்லாண்டு வாழ்க!

சைவசித்தாந்த சமாஜம்:—கும்பகோணத்தில் மகாமகத்தின்போது
அன்னதானமும், மூன்றுநாட்கள் சைவப்பிரசங்கங்களும், யாழ்ப்பாண
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள் அரியமுயற்சியால் தருமபுராதீன
திருவாவடுதுறை யாதீனம் திருப்பனந்தாள் ஆதீனம் பெருந்தோட்ட
பிரபுக்கள் ஆதிய பல பிரமுகர்கள் ஈந்த நிதிகொண்டு ஆற்றிய அரும்பெரு
தொண்டு பாராட்டத்தக்கதாம்.

---

## ஆங்கீரசஹு நடப்பு வட்டி விவரம்.

| மாதம் | நாள் | சென்னை | இரங்கூன் | செய்கோன் |
|---|---|---|---|---|
| சித்திரை | ௩௧ | 0—10—0 | 0—8—0 | 0—10—0 |
| வைகாசி | ௩௧ | 0— 9—0 | 0—8—0 | 0— 9—0 |
| ஆனி | ௩௨ | 0— 8—6 | 0—8—0 | 0— 8—6 |
| ஆடி | ௩௧ | 0— 8—0 | 0—7—0 | 0— 8—0 |
| ஆவணி | ௩௧ | 0— 8—0 | 0—7—0 | 0— 8—0 |
| புரட்டாசி | ௩௧ | 0— 8—0 | 0—7—0 | 0— 8—0 |
| ஐப்பசி | ௩௰ | 0— 8—6 | 0—7—6 | 0— 8—0 |
| கார்த்திகை | ௨௯ | 0— 8—9 | 0—8—0 | 0— 8—0 |
| மார்கழி | ௨௯ | 0— 9—0 | 0—9—0 | 0— 8—0 |
| தை | ௩௰ | 0— 9—6 | 0—8—6 | 0— 8—0 |
| மாசி | ௩௰ | 0— 9—6 | 0—7—6 | 0— 8—0 |
| பங்குனி | ௩௰ | 0— 9—6 | 0—6—6 | |

# செய்தித் திரட்டு.

இந்தோசீன கவர்மெண்ட்:—இக் கவர்மெண்டு தன்னாட்டிற் குடியே
றிய பிரஜைகளைக் காப்பதே கடமையாகக் கொண்டதென்பது தொன்று
தொட்டவழக்கமாகும். எவ்வாறெனில்.—இதர இராஜ்யங்களில் கடனா
ளியான எவனும் பிரஞ்சுதேசத்திற்போய்ச் சேர்ந்தால், அவன் பட்டகடன்
கள் அங்குவந்து அவனைப் பாதிக்கமுடியாது. இவ்விதம் தன்னாட்டிற்
குடியேறிய மக்கட்குப் பாதுகாப்பளிப்பதை மேற்கொண்டுள்ள கவர்
மெண்ட், தன்னாட்டில் பணப் பற்றுவரவுத்தொழிலை நெடுங்காலமாக
நடத்திவரும் பிரிட்டிஷ்பிரஜைகளும் பாரதமக்களும் ஆகிய நாட்டுக்
கோட்டைச் செட்டியார்களை நாடு கடத்துதல் என்பது அடாத செயலும்
அநீதியுமாக இருக்கிறது. பெரும்பணங்களை வரவுசெலவுசெய்து கொண்
டிருக்கிறவர்களைத் திடீரென நாடு கடத்துவதென்றால், அவர்களுடைய
பணங்களின் கதி யென்னாகிறது? வருடம் ஒன்றுக்கு ரிங்கி 2000, 3000
வீதம் வரியிறுத்துக் கவர்மெண்டின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நிரபராதி
களாக இருந்துவருகிற செட்டியார்களை நாடுகடத்துவது நியாயமா என்று
ஆழ்ந்துசிந்திக்க வேண்டாமா? இதுசமயம் தேசமெங்குமே பணநெருக்கடி
யாகத்தான் இருக்கிறது. பணச் செழிப்பினாலுண்டாகும் மகிழ்ச்சிக்கும்,
பணத் தளர்ச்சியினாலுண்டாகும் வாட்டத்திற்கும் தாயகமாயுள்ளவர்கள்
நாட்டுக்கோட்டைச் செட்டியார்களே யாவார்கள். இந்தநிலைமையில் இவர்
களுக்கு வரவேண்டியவைகளை வாங்கினாற்றானே, கொடுக்கவேண்டியவை
களைக் கொடுத்து நிர்வகிக்கமுடியும்? இவர்களுக்கு வரவேண்டியகடன்
களை வரப்பற்ற சட்டப்படி இவர்கள் நடத்தும் நடவடிக்கையைக் கோர்ட்
டார் அநுமதித்துத்தான் நிறைவேற்றுகிறார்களேயன்றி, இவர்கள் சுயேச்
சாதிகாரத்துடன் நிறைவேற்றுவ தில்லையே. பணநெருக்கடியான சமயத்
தில், கடனாளிகளை இமிசிக்கக் கூடாதெனக் கவர்மெண்ட் கருதினால்,
கோர்ட்டில் கடனாளிகளுக்குக்கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றுகிற தவ
ணைகொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்ட் ஒருஉத்தரவுபிறப்பித்துவிடு
வதே போதியதாயிருக்க, அதைக் கையாளாமல் கோர்ட் அனுமதிபெற்று
நிறைவேற்றுகிற எவரையும் நாடுகடத்துவதென்பது ஒரு சிறிதும்
பொருத்தமில்லாததாயிருப்பதால், இண்டோசீனா க்வர்ன்மெண்டார் இப்
போது சிலர்மீது பிரயோகித்திருக்கிற நாடுகடத்தும் உத்தரவையொழித்
து, பழமைபோல் தங்கள் இராஜ்யத்தில், தங்களாதரவில், தங்களைநேசித்
துவாழும் செட்டியார்களுக்கு-யாதொரு இடையூறுமின்றி நன்மைபுரிய
அவர்கள் மனங்கொள்ளும்படி நடுவுநிலைமையுடைய கடவுள் அருள் புரி
வாராக. அங்ஙனமே நகரத்தார்களின், பலமான முயற்சி காரணமாக
அரசாங்கத்தார் நீதி முறைமைக் கிணங்கி சமாதானம் நிலவியுளதாம்.

பரிமணங்குடி:—ஸ்ரீ சண்முகநாதசுவாமிகோவிலில் மாசி மீ கார்த்தி
கையிலும், பங்குனி மீ கார்த்திகையிலும், விசேட அபிடேக ஆராத
னங்கள், மடாலயத்தில் ஸ்ரீ பரமகுருசுவாமிகள் குருபூஜை, சைவசன்மார்க்க
சங்கவளர்ச்சியாதி பிறவும், தண்டலை ம-ா-ா ஸ்ரீ. வீர. அருணசலம் பிள்ளை-
சுப்பையா பிள்ளை பொருளுதவிகொண்டு ஷை தேவஸ்தான உரிமையாளர்
செ. மு. முத்துப் பிள்ளையவர்களால் இனிது நடைபெற்றன.

உ

# சிவநேசன்.

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமயவுண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மை யாதிய கட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ | 2 4 0 | அதற்கு மூலதனம் | ரூ | 30 0 0 |
| அயல்நாட்டிற்கு | ரூ | 3 0 0 | அதற்கு மூலதனம் | ரூ | 40 0 0 |

தனிப்பிரதி அணு 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## நிருபநேயர்கட்கு அறிவிப்பு.

க. நமது சிவநேசனுக்கு நிருபம் வரைவோர் நமது பத்திரிகைநேயராயிருத்தல்வேண்டும். உ. வரையும் விஷயங்கள், சமயநிந்தனை சாத்திரநிந்தனை, தெய்வநிந்தனை, ராஜநிந்தனை ஆதிய நிந்தனைகளில்லாமலும், எவரையுங் குறிப்பிட்டுத் தாக்காமலும், பொதுவாகவும் நன்மை பயப்பனவாகவு மிருத்தல் வேண்டும். ங. பிழையின்றி நல்ல மையினுல் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதல்வேண்டும். ச. வருங் கடிதங்கள் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாதுவிடவும் கூடும். ரு. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் கட்டுரைகள் திருப்பி யனுப்பப் படமாட்டா. சு. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்குக் கடிதக்காரர்களே பொறுப்பாளிகளாவர்.

## சிவநேசன் அச்சுக்கூடம்.

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லாவித அச்சுவேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர் மனதிற்குகந்தவண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

அமைச்சர்.

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில் பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.